# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 60 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை (13.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 27, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


**வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழா இன்று**




**'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்**




QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

0777983308


# லிபியாவில் பேரழிவு!

- 3000 பேருக்கும் மேல் உயிரிழப்பு
- ஆயிரக்கணக்கானோரை காணவில்லை
- 3 நாட்களுக்கு தேசிய துக்க தினம் அறிவிப்பு



கே. சுபானி

லிபியாவை தாக்கிய 'டேனியல்' புயல் மற்றும் கடும் மழை, வெள்ளத்தில் சிக்கி 3 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 10 ஆயிரம் பேர் வரை காணாமல் போயுள்ளனர்.

அத்தோடு, 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவரும் நிலையில் காணாமல் போனோரை மீட்புப் படையினர் மும்முரமாகத் தேடிவருகின்றனர். இதேவேளை, உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

02 பக்கம்

## மாணவர்களுக்கு ரணில் பாராட்டு



2021 மற்றும் 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (12) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்றது.

திறமையான மாணவர்களுக்கு ஜனாதிபதியின் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் என்பன ஜனாதிபதியின் கரங்களினால் வழங்கி வைக்கப்பட்டன. அதன்படி, 2022ஆம் கல்வியாண்டில் 06 பாடப்பிரிவுகளில் முதல் 10 இடங்களுக்குத் தெரிவான 60 மாணவர்களும் 2021 கல்வியாண்டில் 06 பாடப்பிரிவுகளில் தேசிய மட்டத்தில் முதல் 05 இடங்களைப் பிடித்த 30 மாணவர்கள் உட்பட மொத்தம் 90 மாணவர்கள் இதன்போது ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டனர். 06 உயர்தரப் பாடப்பிரிவுகளையும் உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா...

02 பக்கம்

## மாணவன் உயிரிழப்புக்கு அதிகாரிகளே பொறுப்பு

### அமைச்சர் பந்துல திட்டவட்டம்



நா.தினுஷா

புகையிரத திணைக்களத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இன்று (13) முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது. அவ்வாறு கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ள நிலையிலேயே புகையிரத சாரதிகள் அநீதியான முறையில் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். எனவே, இதுபோன்று புகையிரத பயங்கரவாதத்தை...

02 பக்கம்

## ரயிலின் மேற்கூரையில் பயணித்த பல்கலை மாணவன் பரிதாபப் பலி



ரயிலின் மேற்கூரையில் பயணித்த மாணவன் ஒருவர் ஹொரபே ரயில் நிலையத்துக்கு அருகில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கண்டியில் இருந்து நேற்று கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலின் கூரையில் பயணித்த மாணவன் ஹொரபே ரயில் நிலையத்தின் கூரையில் மோதுண்டு படுகாயமடைந்த மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, மொரகொட பிரதேசத்தைச்...

02 பக்கம்

## ஈஸ்டர் தின தாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் கண்டறிவோம்

### சஜித் பிரேமதாச அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் வெளிக் கொணரும் வகையில் விசாரணை நடத்தப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச காலி ஸாஹிரா கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நமது நாட்டில் பல்வேறு இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மதங்களை பின்பற்றும் பலர் உள்ளனர். எனவே நாம் ஒரு நாடாக ஒன்றிணைந்து ஒன்றுபட வேண்டும். பிரிவினைவாதம் ஒன்றே இந்த...

02 பக்கம்

## ஜனாதிபதி ரணில் பெசில் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒரு மணி நேரம் இரு தரப்பினருக்கும் இடையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிகிறது.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழுவுக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பெசில் ராஜபக்ஷ முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கு சாதகமாக பதிலளிக்காத காரணத்தினால் ஜனாதிபதிக்கும் பெசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மைக்காலமாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும், ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில், அடுத்த வரவு செலவுத் திட்டம் மற்றும் அதில் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த சந்திப்பின் போது எதிர்கால அரசியல் விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## போதைப்பொருள் ஒழிப்பு: டக்ளஸ் விசேட கூட்டம்



யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலான குழு ஒன்றினை அமைத்து இணைந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா...

02 பக்கம்

## கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைக்கும் பணி மாத்தறையில்

### எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறுமென்கிறார் ஐ.ம.ச. செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார



கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத்திட்டதை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற நேற்றைய ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இன்று நாட்டின் சகல துறைகளும் சரிந்துபோயுள்ளன. பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு நாட்டின் பெரும்பான்மையினர் பட்டினியில் இருக்கின்றனர்.

மக்கள் வாழ்வதற்கான போராட்டதை முன்னெடுத்துள்ளனர்.

02 பக்கம்

## மல்லாகம் நீதிமன்றத்தில் 50 கிலோ கஞ்சா மாயம்

மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளுக்காக களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்த 50 கிலோகிராம் கஞ்சா காணாமல் போயுள்ளதாக தெரிவித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற பதிவாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து தெல்லிப்பழை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி நீதிமன்ற பதிவாளர் விடுமுறையில் சென்றுள்ளார். மீண்டும் 10ஆம் திகதி பணிக்குத் திரும்பியுள்ளார். வழக்கு சான்றுப் பொருள் உள்ள அறையை பரிசோதனை செய்தபோது 50 கிலோகிராம் கஞ்சா காணாமல் போயிருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### கமெண்ட் கந்தர்...



என்னதான் நவீன உலகம் எண்டாலும் ராஜபக்ஷமாருக்கு உந்த மந்திர மாயங்களில இன்னமும் நம்பிக்கை இருக்குது என்னங்கோ...

## கல்விக் கொள்கை விரைவில் அறிமுகம்

### அமைச்சர் விஜேதாச



இலங்கையின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்குவது காலத்தின் தேவையாக இருப்பதாக இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்கான பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் தலைவர் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

02 பக்கம்

## நாமல் மீது பேய்விரட்டு

02 பக்கம்



### உஷ்



சனல் 4

தொலைக்காட்சி நிலையம் விசேட காணொளி சர்ச்சைக்குள்ளாகியிருப்பது எல்லோருக்கும் தெரியும்..

ஆனால் இன்னொரு விடயமும் அடங்கியுள்ளது..

அந்த காணொளி தயார்படுத்தலுக்காக அந்த நிறுவனத்தின் பணியாளர்கள் இலங்கை வந்து குண்டுவெடிப்பு நடந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு பல முக்கியஸ்தர்களை சந்தித்து விட்டு சென்றுள்ளார்களாம்.. ஆனால் அவை எதுவுமே இலங்கை பாதுகாப்புத்துறைக்கு தெரியவரவில்லையாம்.. அவற்றை கவனிக்காமல் அப்படி கோட்டை விட்டது யார் என்று உள்ளே தேடல் நடக்கிறதாம்...

## கல்விக் கொள்கை...

போட்டித் தன்மைகொண்ட கல்வி முறையொன்று இருக்கும் வரையில் நல்லொழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப முடியாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ,

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, ஆரம்பத்திலேயே ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்துகின்றது. இந்தப் போட்டியால் குழந்தைகளிடையே வெறுப்பும் கோபமும் எழுகிறது. பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றாலும், மறுபுறம் மானிடப் பண்புகளில் வளர்ச்சி ஏற்படுவதில்லை. மேலும், சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும் போட்டி நிலவுகிறது. போட்டித் தன்மையைக் கொண்ட கல்வி முறை இருக்கும் வரை, நாட்டுக்காக ஒரு தன்னலமற்ற சமூகத்தை உருவாக்குவது கடினம்.

பிள்ளைகளுக்கு ஓய்வுடன் கூடிய மனநிலை இருக்கவில்லை என்றால், அறிவைப் புரிந்து கொள்வது கடினம். பல நாடுகளில் பிரத்தியேக தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை. ஆனால் அவர்கள் கல்வி நிலையில் வெற்றிகரமாக உள்ளனர். போட்டியின் பின்னர் பல்கலைக் கழகங்களுக்குள் பிரவேசிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களுக்காக, பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படும் முன்னுரிமையை முன்பள்ளி மேம்பாட்டுக்கும் வழங்க வேண்டும் என்று நாம் பரிந்துரைத்துள்ளோம். உயர்க்கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்பிப்பது கடினமல்ல.

ஆனால் முன்பள்ளிப் பருவத்தையே நாம் முதலில் சீர்செய்ய வேண்டும்.

இவ்வாறான நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குப் பதிலாக சுயாதீனமாக செயற்படக்கூடிய உயர்கல்வி ஆணைக்குழு ஒன்றை நாம் முன்மொழிந்துள்ளோம்.

இனிமேல், கல்விக் கடைகள் உருவாக்கப்படுகின்றன என்றும் கல்வி, பணத்துக்கு விற்கப்படுகின்றது என்றும் கல்வி தரமற்றது என்றும் யாரும் கூற முடியாது. கடந்த காலத்தில் கல்வி முறையில் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்தில் நடபெறாமல் இருக்க பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்துள்ளோம். மேலும், 10 ஆம் வகுப்பில் சாதாரண தரப் பரீட்சையையும் 12ஆம் வகுப்பில் உயர்தரப் பரீட்சையை நடத்துவது குறித்தும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்கான பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவின் தலைவர் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

## போதைப்பொருள் ஒழிப்பு...

தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (12) நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ள குறித்த குழுவின் ஊடாக தகவல்களை பரிமாறி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்தினார்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போதைப்பொருள் பாவனை என்பது இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தினையே அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வருகின்றமையினால், அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் அதிகாரிகள் உணர்வுரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், இக்கலந்துரையாடலில், யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தல், முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், சுகாதார தரப்பினர் உட்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## லிபியாவில் பேரழிவு!...

இந்நிலையில், வெள்ளத்தில் மூழ்கியுள்ள டெர்னா நகரிலிருந்து 1,000 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

லிபியாவின் பல கடலோர நகரங்களில் பெரும் பகுதிகள் அழிந்துள்ளன. இந்த பேரழிவு காரணமாக 03 நாட்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என அறிவித்துள்ள அந்நாட்டு அரசு, நாடு முழுவதும் தேசிய கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறும் அந்நாட்டு மக்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

லிபியாவில் கடந்த சிலநாட்களாக கடும் மழை பெய்துவரும் நிலையில், மத்தியதரைக்கடலில் உருவான 'டேனியல்' எனப் பெயரிடப்பட்ட புயல், அந்நாட்டின் கிழக்கு பகுதியை தாக்கியது.

கடற்கரை நகரங்களில் சூறாவளி காற்றுடன் கடும் மழை பெய்ததால் அங்குள்ள நீரேந்துகளின் நீர்மட்டம் உயர்ந்த நிலையில் டெர்னா நகரில் அமைந்துள்ள இரண்டு அணைகள் உடைப்பெடுத்த நிலையில் முழு டெர்னா நகரும் வெள்ளத்தில் மூழ்கியது. வீடுகள், வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

டெர்னா நகரைத் தொடர்ந்து சூசா, பாய்தா, ஷாஹத் மற்றும் மார்ஜ் உள்ளிட்ட நகரங்களை டேனியல் புயல் கடுமையாக தாக்கியுள்ளது. குறிப்பாக டெர்னா நகரில் பாரிய பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நகரம் பேரழிவு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து லிபியாவின் செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் தக்ஃபிக் ஷுக்ரி தெரிவிக்கையில்,

லிபியாவை தாக்கிய சக்திவாய்ந்த டேனியல் புயல் மற்றும் கடும் மழை, வெள்ளத்தில் சிக்கி 3ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 10ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர். இதேவேளை, 20ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுமார் 14 தொன் நிவாரணப் பொருட்கள் அடங்கிய விமானமொன்று தலைநகர் திரிபோலியிலிருந்து பாதிப்புக்குள்ளான பெங்காசிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் அப்துல் ஹமிட் டிபீபா நேற்று (12) தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பேரழிவுக்குள்ளான டெர்னா நகருக்கு நுழைவது கடினமாக உள்ளதாக மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

## நாமல் மீது பேய்விரட்டு...

பொதுஜன பெரமுன மற்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பியின் மீதுள்ள தீமைகளை நீக்கும் நோக்கில் பொதுஜன பெரமுனவின் பெலியஅத்த தொகுதி சபைக் கூட்டத்தின் இறுதியில் பரிகார பூஜை நடைபெற்றது.

பொதுஜன பெரமுனவின் தொகுதி கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் பெலியஅத்த புவக்கதந்தவில் நடைபெற்றது.

அதன்போது, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அனுருத்த, டி.வி.சானக்க, பி.எம்.தேனுக விதானகம திஸ்ஸ குட்டியாராச்சி, டபிள்யூ.டி. வீரசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சபைக் கூட்டத்தின் இறுதியில் சலுபலி எனப்படும் தோஷங்களை அகற்றும் பூஜை இடம்பெற்றதுடன், பொதுஜன பெரமுன மற்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி மீதுள்ள தீய சக்திகளை நீக்கவே இந்த நிகழ்வு இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## ரயிலின் மேற்கூரையில்...

சேர்ந்த டி.ஐ.பெரேரா என்பவரே உயிரிழந்தார். இவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர்.

புகையிரத சாரதிகள் நேற்று ஆரம்பித்த பணிப் புறக்கணிப்பு காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட புகையிரத சேவை மட்டுமே நடைபெற்றது. இந்த நெருக்கடிக்குள் பல்கலைக்கழகம் செல்ல ரயிலில் பாதுகாப்பின்றி பயணித்தபோதே மேற்படி விபத்தில் குறித்த மாணவன் சிக்கியுள்ளார்.

## மாணவர்களுக்கு ரணில்...

ரொக்கப்பரிசுகளும் ஏனைய இடங்களைப் பெற்றவர்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, கல்வி தொடர்பான கருத்துகளை தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இங்கு மாணவி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தனது நண்பர்களுடன் பேசும்போது, எதிர்காலத்தில் இலங்கையில் தான் மட்டும் எஞ்சியிருக்கும் நிலை ஏற்படுமா என்ற அச்சம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார். தனது நண்பர்கள் அனைவரும் கல்வி கற்று முடிந்த பின்னர் வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ளதாகவும் உயர்கல்வி பெறும் அனைவருக்கும் இலங்கைக்கு சேவை செய்வதற்கான வேலைத்திட்டம் தேவை எனவும் அவர் கூறினார்.

மற்றொரு மாணவி கருத்துத் தெரிவிக்கையில், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவது இளவயது மாணவர்களே என்றும் அவர்களுக்குத் தேவையான பாடங்களை 40 நிமிடங்களாகப் பிரிப்பது அவர்களின் பாடம் தொடர்பான அறிவைக் கற்கத் தடையாக இருப்பதாகவும் தெரிவித்தார். மேலதிக வகுப்புகளில் பாட அறிவைக் கற்கும் கால அவகாசம் பல மணி நேரங்கள் என்றும் அதனால்தான் மேலதிக வகுப்புக் கல்வி வெற்றிகரமானது என்றும் பலர் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த மாணவி ஒருவர், உயர்தரத்துக்கு அரசால் வழங்கப்படும் பாடப் புத்தகங்கள் உயர்தரத்தில் இருப்பதாகவும் அந்த பாடப் புத்தகங்களின் உள்ளடக்கங்களை மேலதிக கல்வி வகுப்புகளில் மேலும் மேம்படுத்த முடியும் என்றும் கூறினார். நடைமுறைக் கோட்பாடுகளை அதிகப்படுத்துவதன் மூலமே உயர்தர மாணவர்களை பாடசாலையில் தக்கவைக்க முடியும் என்பது தனது கருத்து எனவும் அவர் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தற்போது பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் நாடளாவிய ரீதியில் இரண்டாமிடம் பெற்றதாகத் தெரிவித்த அவர், தான் சிறுவயது முதல் ஆடை வடிவமைப்பில் ஆர்வம் கொண்டிருந்ததாகவும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அந்தப் பாடநெறியைத் தெரிவு செய்ததாகவும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அந்தத் துறையில் பட்டம் பெற்று இலங்கையில் தொழில் வாய்ப்புகள் பெற முடியுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது என்றார்.

எனவே, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும்போது, பட்டப் படிப்புக்கான பாடத்தை தெரிவு செய்வதில், அரசு வழிகாட்டுதல்களை வழங்கினால், திறமையான மாணவர்கள் குழுவை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர் ஒருவர், பல்கலைக்கழகங்களில் உள்ள பிரச்சினைகளை அரசுடன் நேரடியாகப் பேசுவதற்கு தளமொன்று இல்லாததால், பல பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் எனவே, மாதம் ஒருமுறை அதற்கு தகுந்த வாய்ப்பை வழங்க வேண்டும். இதன்மூலம் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சமூகம் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் நிலவும் தவறான புரிதல்களையும் அவநம்பிக்கையையும் குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 13 வருடங்கள் எடுக்காமல் அதற்கு முன்னர் அதற்கான சந்தர்ப்பம் வழங்கினால் மாணவர்கள் பட்டப் படிப்பை விரைவாக முடித்து வேலைவாய்ப்பைப் பெற்று ஸ்திரமாக மாற வாய்ப்புக் கிடைக்கும் என மற்றொரு மாணவர் தெரிவித்தார்.

இவ்வாறு மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளையும் கருத்துகளையும் செவிமடுத்த ஜனாதிபதி அவை தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக குறிப்பிட்டார்.

சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள் ஜனாதிபதியுடன் குழு புகைப்படமும் எடுத்துக் கொண்டனர். கலந்து கொண்ட மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் காலை உணவு மற்றும் பகலுணவு என்பனவும் வழங்கப்பட்டதோடு தாமரை கோபுரம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் என்பவற்றை மாணவர்கள் இலவசமாக பார்வையிட ஜனாதிபதி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது.

இளைஞர் விவகாரம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் டபிள்யூ. ஏ. சரத்குமார, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மற்றும் அதிகாரிகள் குழுவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மாணவன் உயிரிழப்புக்கு...

ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் நேற்று (12) நள்ளிரவு முதல் புகையிரத போக்குவரத்து அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும், நேற்று புகையிரதத்தில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணத்துக்கான முழு பொறுப்பையும் சம்பந்தப்பட்ட 84 சாரதிகளே ஏற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (12) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புகையிரத திணைக்களத்தில் முன்னெடுக்கப்பட்ட அநீதியான பணிப்புறக்கணிப்பினால் உயிரிழந்த அப்பாவி இளைஞனுக்கு கவலையை தெரிவித்துக்கொள்கிறேன். புகையிரத சேவை நீண்டகாலம் பொது போக்குவரத்துக்கு பங்களிப்பு செய்து வருகிறது. மாணவர்கள், பணிகளுக்காக செல்பவர்கள் என பலரும் இந்த சேவையை பயன்படுத்தி வருகிறார்கள். இருந்தபோதும் இந்த திணைக்களம் நட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றது. இந்த நிலைமையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதும் ஒருசில தொழிற்சங்கத்தினர் அதற்கு பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தார்கள். எந்த முன்னறிவித்தலும் இன்றி திடீரென புகையிரத போக்குவரத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்கள். இதனால் மக்களே பெரும் பாதிப்பை சந்தித்திருந்தார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் கலந்துரையாடி தீர்வுக் காண்போம் என்றும் இடையில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமாக இருந்தால் புகையிரத பொது முகாமையாளருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறும் அறிவித்திருந்தேன். அவ்வாறு தீர்வு எடுக்க முடியவில்லை என்றால் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடுமாறும் அவ்வாறும் இல்லாத பட்சத்தில் என்னுடன் கலந்துரையாடுமாறு தொழிற்சங்க தலைவர்களிடம் மிக வினயமாக கோரியிருந்தேன். அவர்களின் பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வுகளையும் பெற்றுக்கொண்டுள்ளேன். ஒருசில பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள முடியா நிலையும் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே இந்த திணைக்களத்தை அதிகாரசபையாக அறிவிக்க நடவடிக்கை எடுத்திருந்தேன்.

இந்த விடயங்கள் தொடர்பில் பலமுறைகள் தொழிற்சங்களுக்கு அறிவித்தும் புகையிரத சாரதிகள் திடீர் பணிப்புறக்கணிப்புகளை மேற்கொள்கிறார்கள். இன்று புகையிரத சாரதிகளுடன் பேச்சுவார்த்தையொன்றும் இருக்கிறது. இந்த பேச்சுவார்த்தைக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே அனுமதி கிடைத்திருந்தது. இந்த கலந்துரையாடலுக்கான அறிவிப்பையும் தொழிற்சங்க தலைவர்களுக்கு அறிவித்திருக்கிறோம்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் ஏதாவதொரு அரசியல் தலையீட்டினாலோ அல்லது வேறு ஏதோ காரணங்களை அடிப்படையாகக் கொண்டு திடீரென 18 ஆயிரத்துக்கு மேல் இருக்கும் பணியாளர்களில் 84 புகையிரத சாரதிகள் மாத்திரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால், 30 – 40 புகையிரத போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

இதனாலேயே நேற்று மக்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியிருந்தனர். புகையிரதத்தின் மேல் பயணித்த இளைஞனின் தலை பாலத்தில் மோதுண்டே உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்புக்கான முழு பொறுப்பையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட அக்கறையற்ற 84 சாரதிகளுமே ஏற்கவேண்டும். நாளை கலந்துரையாடல் இடம்பெறவுள்ள நிலையில் குறித்த 84 பேரினால் மாத்திரம் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பானது முழுமையாக புகையிரத பயங்கரவாதமாகும். அதனால், இந்த பயங்கரவாதத்துக்கு அடிப்பணிய அரசாங்கம் தயாராக இல்லை.

புகையிரத திணைக்களத்தின் பிரதானியினால் நிவர்த்தி செய்ய முடியாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு அநீதியான முறையில் அப்பாவி மக்களின் உயிருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுகிறார்கள் என்றால் அதனை கொலையாகவே கருதப்படும். இதற்கு முன்னர் இதுபோன்ற பணிப்புறக்கணிப்புகளின் பின்னணியில் செயற்பட்ட தொழிற்சங்க தலைவர்கள் இருவருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளேன். அவர்களும் தீர்மானங்களை விரைவாக வழங்குவதாக தெரியவில்லை. இவர்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் அவசியமாகும்.

நேற்று நள்ளிரவு முதல் புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் அனுமதி கோரியுள்ளேன். அதனை மீற முயற்சிக்கும் சகலருக்கும் எதிராக முடிந்த அதிகபட்ச நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் புகையிரத சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெளியிட்டார். அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழ் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தின தாக்குதலில்...

நாட்டை அழிக்கும் என்பதனால், எந்த ஒரு இனத்தையோ, மதத்தையோ சேர்ந்த யாரும் தீவிரவாதத்தை ஏற்கக் கூடாது. அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விசுவாசிகள் எந்த பேதமும் இன்றி ஒரே தாயின் பிள்ளைகள் போல் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தீவிரவாதத்துக்கு போலவே எந்த பயங்கரவாதத்துக்கும் எமது நாட்டில் இடமில்லை. எனவே அனைத்து இனங்களும் மதங்களும் ஒன்றிணைந்து அனைத்து இனங்களிலும் மதங்களிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் தீவிரவாதத்தை தோற்கடிக்க வேண்டும். கடந்த காலங்களில் தீவிரவாதத்தை அரசியல் நோக்கத்துக்காக சில கட்சிகள் பயன்படுத்தின.

ஜனாதிபதி கதிரைக்கு செல்லும் ஆசையில் முழு நாட்டையும் துண்டு துண்டாக உடைத்து தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அவர்கள் அழித்தார்கள். ஜனாதிபதி கனவுக்காக, யுத்த வெற்றியின் பின்னர் அனைத்து இனங்களும் சமூகங்களும் ஒன்றிணைந்து ஒரு நாடாக அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக இனவாதத்தைக் கிளறிவிட்டனர்.

மலட்டு கொத்து மற்றும் மலட்டு அறுவை சிகிச்சைகள் செய்ததாகக் கூறி வைத்தியர் சாபி இடைநீக்கம் செய்யப்பட்டார். கொவிட் காலத்தில் தகனமா அடக்கமா என்ற பிரச்சினை வந்தபோது உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களைக் கூட மறந்து விட்டு செயற்பட்டனர். இதன்போது, வீதிகளில் இறங்கி குரல் எழுப்பியது ஐக்கிய மக்கள் சக்தியே.

இன, மத முரண்பாடுகளை உருவாக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அரசாங்கத்தின் கீழ் எந்த இனமும் மற்றொரு இனத்துக்கும் எந்த மதமும் மற்றொரு மதத்துக்கும் பிரிவினையை உண்டாக்கும் விதமாக செயற்பட்டாலோ அல்லது அவ்வாறு கருதப்பட்டாலோ அது குற்றச் செயலாகக் கருதப்படும்.

இனவாதம் இல்லை என்று சொல்லும் கட்சிகள் தற்போது ஒன்று சேர்ந்து திருடுகின்றன. மக்களை வாழ வைப்பதா அல்லது மக்களை மயானத்துக்கு அழைத்துச் செல்வதா என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை கடந்த வெள்ளிக்கிழமை 225 பேருக்கும் ஏற்பட்டபோது, மக்களை வாழ வைக்க 74 பேர் மட்டுமே நின்றனர். 134 அடிமைகள் மக்களைக் கொல்லும் பக்கம் நின்றனர்.

அமைச்சுப் பதவிக்கு ஆசைப்படும் அரசியல் தவளைகள் இந்த அரசியல் களத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும். அவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியானவர்களின் சடலங்களுக்கு மேல் சென்று அரசாங்கத்தை கைப்பற்றினர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று கூறியே கோட்டபாய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார்.

இதற்கு இதுவரையில் எந்த நீதியும் நிலைநாட்டப்பட்டதாக இல்லை. இதில் உண்மை மறைக்கப்பட்டு, பொய் ஆட்சி செய்ததாகவும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் வெளிக்கொணரும் வகையில் விசாரணை நடத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு வாக்குறுதியளித்தார்.

## கட்சிக்கு புதிய...

சுகாதாரத்துறை முற்றிலுமாக சரிந்து விட்டது. இதற்கான காரணங்களை நாம் பாராளுமன்றத்தில் முன்வைத்தோம். நாட்டு மக்கள் இன்று புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சூழ்ச்சியால் ஆட்சிக்கு வந்தமை இன்று சர்வதேசத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடந்த அரசாங்கம் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேச அமைப்புகள் கூறுகின்றன.

சூழ்ச்சியினாலேயே கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேசம் இன்று கூறுகின்றது. நாட்டின் புலனாய்வு பிரதானிக்கு முறைப்பாடுகள், குற்றங்கள் எழுந்துள்ளன.

எனவே நாட்டுக்கு புதிய ஆட்சி தேவை, நாட்டுக்கு பொறுப்பான நிர்வாகம் தேவை. இந்த ஆட்சியை பொறுப்பேற்க சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஏனைய கட்சிகள் தேர்தல் தொகுதிக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது மாத்திரமே. நாம் நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் தொகுதிக் கூட்டங்களை நடத்தி முடித்துவிட்டோம். கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத்திட்டத்தினையும் கிராமத்துக்கு கிராமம் செல்லும் புதிய வேலைத்திட்டத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

அன்றைய தினங்களில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மாவட்டத்துக்குச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல், வாக்காளர் பிரிவு கிளைகள், மகளிர் பிரிவுகள், இளைஞர் பிரிவுகள், பிக்குகள் முன்னணியின் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை அன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளோம். அடுத்த அடுத்த மாதங்களில் இந்த வேலைத்திட்டத்தை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவோம். நாங்கள் வெற்றியை தனதாக்குவது இவ்வாறே.

நாட்டை கட்டியெழுப்புவதே ஐக்கிய மக்கள் சக்தியின் குறிக்கோள். அந்த இலக்கை வெல்வதற்கான பிரசாரம் செப்டெம்பர் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் மாத்தறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும். நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலுக்கு முகங்கொடுக்கக் கூடிய எந்தவொரு தரப்பும் ஆளுந்தரப்பில் இல்லை. பொதுஜன பெரமுனவுக்கு கிராமத்துக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி குறித்து பேசுவதில் அர்த்தமில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரமான பொருளாதாரக் கொள்கையைப் பற்றி நினைக்கும் போதே அவர்களுக்கு ஒரு வாக்கு கூட கிடைக்காது.

மகளிர் சக்தி, இளைஞர் சக்தி, கிளைச் சங்கம் மட்டுமின்றி, பிக்குகள் ஆலோசனை சபை, சர்வமதத் தலைவர்கள் ஆலோசனை சபை, தொழிற்சங்க இயக்கங்கள் சார்புடைய அமைப்புகளாலும் கட்சியைப் பலப்படுத்துவோம். அடுத்த வருடம் தேர்தலுக்கான வருடமாகும். எந்நேரத்திலும் தேர்தலை சந்திக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. இந்த போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

**கேள்வி : சனல் - 4இன் அறிக்கை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன?**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நாட்டில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. மலல் கொடா ஆணைக்குழு நியமிக்கப் பட்டது. அவை காகிதங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன. விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உண்மைகள் இதுவரை வெளிவரவில்லை.

பல சர்வதேச புலனாய்வு முகவராண்மை அமைப்புகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்த வந்தன. இலங்கையில் நடைபெறும் விசாரணைகளில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, சர்வதேச விசாரணையொன்றை நடத்துமாறு கோருகிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களே இந்நாட்டு பாதுகாப்புப் படைகளில் தற்போது உள்ளனர்.

**கேள்வி : கோட்டபாய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன?**

கோட்டபாய ஆட்சியில் இருந்து விரட்டப்பட்ட ஒருவர். நாட்டு மக்களை பிச்சைக்காரர்களாக்கி விவசாயத்தை முற்றாக நாசமாக்கிய கோட்டபாய மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினரும் பொதுஜன பெரமுனவினரும் கோட்டபாயவை நிராகரித்துள்ளனர்.

**கேள்வி : சுகாதார அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடந்தது?**

சுகாதார அமைச்சில் இடம்பெற்று வரும் மோசடி மற்றும் ஊழலை வெளிப்படுத்த வேண்டியது அவசியமே அதனூடாக எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு அமைச்சரோ, அரசாங்கத்தாலோ பதில் சொல்ல முடியவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை இழக்க நேரிடும். நோய்வாய்ப்பட்டவர்கள் இறக்கும்போது நடக்கும் திருட்டைப் பார்த்தும் தங்கள் உறுப்பினர் பதவியை பாதுகாக்க வாக்களித்தனர்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியின் குழு ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் என ஐக்கிய தேசியக் கட்சி பெரும் நம்பிக்கை கொண்டுள்ளது?**

தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதி பதவிக்கு வந்த நாள் முதல் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இவ்வளவு பேர் வருகிறார்கள் அவ்வளவு பேர் வருகிறார்கள் என சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால், யாரும் செல்லவில்லை. போக நினைத்தவர்களும் இப்போது நின்றுவிட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடிக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். ஐ.தே.கட்சியையும் மொட்டுக் கட்சியையும் ரணில் விக்கிரமசிங்க குழப்பியுள்ளார் என்பது அவர்களுக்குத் தெரியும். நாங்கள் 26 வருடங்கள் ரணிலுடன் இருந்தோம். அவரால் ஆட்சிக்கு வரமுடியவில்லை. முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கும் எம்.பிக்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. ஒன்றிரண்டு பேர் போனாலும் இப்போது அவர்களுக்கு என்ன செய்வதென்று அறியாதுள்ளனர்.



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பதுளை போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று (12) பதுளை போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். அரசாங்கத்தின் தற்போதைய வரிக் கொள்கைகள், தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிறுவுதல், மருந்துகளின் விலை உயர்வு, மருந்துகளின் தரம் குறைவு என மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

படம்: ராமு தனராஜா

# வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்




வவுனியா நிருபர்

வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று (12) பிற்பகல் 12.00 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியா பொது வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றிருந்தது.

நாடு முழுவதும் அமைதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது. அதற்கமைவாகவே குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியாவிலும் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் ''மருந்துகள் இல்லை. சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, தனியார் மருத்துவத்தை வளர்க்க இலவச மருத்துவத்தை அழிக்காதே, வைத்தியர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து, வைத்தியர்களை வெளியேற நிர்ப்பந்தித்து இலவச வைத்திய சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம், திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமையில் கை வைக்காதே'' என எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், இலங்கையில் இருந்து பல வைத்தியர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாது, மருந்துகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. வைத்தியர்களின் வெளியேற்றதால் எமது சுகாதாரத்துறை மேலும் பலவீனமடையும். எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியும் எமக்கு தீர்வு கிடைக்காமையால் ஆர்ப்பாட்டத்தை செய்துள்ளோம். இதற்கும் தீர்வு இல்லையெனில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா பிரதிநிதிகள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



27ஆவது குருமா சந்நிதானம் மாசிலாமணி பிரம்மாச்சாரிய தர்ம புர ஆகிய சுவாமிகள் யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்த போது இந்து குருமார்கள் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# ஆஸாத் மௌலானா மீது பெண் ஒருவர் வழக்குத் தாக்கல்

பாறுக் ஷிஹான்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற்போது கருத்துகளை தெரிவிக்கின்ற பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகா ஆஸாத் மௌலானா மீது பெண் ஒருவர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து மோசடியான முறையில் தன்னை திருமணம் செய்து ஏமாற்றியதாக கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கமைய, நேற்று (12) கல்முனை நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் குறித்த பெண் தெரிவித்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை குறித்து விசாரணை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதிவரை குறித்த வழக்கினை ஒத்தி வைத்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவரே தனது சகோதரர் சகிதம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து பிள்ளையான் எனப்படும் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகா ஆஸாத் மௌலானா மீது முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

போலியான ஆவணங்களை சமர்ப்பித்து முதல் திருமணத்தை மறைத்து தன்னை மறுமணம் செய்துள்ளதாகவும் பின்னர் மட்டக்களப்பு தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு அழைத்து






சென்று பல்வேறு ஆசை வார்த்தைகள் கூறி அங்கு சில நாட்கள் தங்க வைத்து குடும்பம் நடத்தினார் எனவும் பின்னர் தன்னை ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி இருப்பதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் -4 ஆவணப்படத்தின் முக்கிய சாட்சியாக இந்த ஆஸாத் மௌலானா தென்பட்டதன் பின்னர் சில தினங்களுக்கு முன்னர் அம்முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார். அத்துடன் 2019.09.29ஆம் திகதி அன்று குறித்த திருமணம் அம்பாறை மாவட்டம் இறக்காமம் எனும் பகுதியில் நடைபெற்றுள்ளதுடன் வரவேற்பு உபசாரங்கள் யாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முக்கிய விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. எனினும் தற்போது இறக்காமம் பள்ளிவாசல் குறித்த திருமணம் குறித்து மறுத்துள்ளதுடன் போலியாக தமது பள்ளிவாசல் ஆவணம் தயார் செய்யப்பட்டு இம்மோசடி திருமணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும், குறித்த பெண்ணை ஆஸாத் மௌலானா தனது முதலாவது திருமணத்தை மறைத்து மேற்கொண்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் சனல் - 4 ஆவணப்படத்தின் முக்கிய சாட்சியாக இந்த ஆஸாத் மௌலானா உள்ள நிலையில் அவர் மீது பெண் ஒருவர் இரண்டு வருடத்துக்கு பின்னர் தான் ஏமாற்றப்பட்டுள்ளதாக அவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் மேற்கொண்டமை பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இது தவிர, குறித்த பெண்ணின் குற்றச்சாட்டினை முன்வைத்து தற்போது ஆஸாத் மௌலானாவின் வெளிநாட்டு தஞ்சம் மறுக்கப்பட்டு நாடு கடத்தப்படுதல் மற்றும் அவரை ஒரு ஏமாற்று பேர்வழியாக இனங்காட்டி இவ்வழக்கினை மேலும் வலுவாக்குவதற்கு மூன்றாம் தரப்பு ஒன்று முயற்சி செய்து வருவதாகவும் அறிய முடிகின்றது.

# கொலைக் குற்றச்சாட்டில் நால்வருக்கு மரண தண்டனை

கூரிய ஆயுதங்களால் தாக்கி நபர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நால்வருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (11) களுத்துறை மேல் நீதிமன்றம் இந்த கொலைக்குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நால்வருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் திகதி களுத்துறை, மதினகந்த பிரதேசத்தில் ஒருவரைக் கொலை செய்து மற்றுமொருவரை படுகாயப்படுத்தியமை தொடர்பில் 07 சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் களுத்துறை மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 1, 2, 3 மற்றும் 5ஆவது பிரதிவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், குற்றம் சாட்டப்பட்ட 6 மற்றும் 7ஆவது பிரதிவாதிகளை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்தும் மேல்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

நீண்ட வழக்கு விசாரணையின் பின் களுத்துறை மேல் நீதிமன்றம் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நால்வருக்கு மரண தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** குழந்தைகளால் செலவுகளோ அல்லது மனச் சங்கடங்களோ ஏற்படலாம். யாரையும் நம்பி இரகசியங்களை உளறி விடாதீர்கள்.

**ரிஷபம்:** உறவுகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள். வாகன பயணங்களின்போது கவனம் வேண்டும்.

**மிதுனம்:** பழையவற்றை அப்புறப் படுத்தி புதியவற்றை உங்களுக்காக வாங்கி மகிழ்ச்சியடைவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**கடகம்:** குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்களால் உங்கள் அமைதி கெடலாம். தன ரீதியில் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** உடல், மன நலத்தை கெடுக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். கணவன் மனைவி உறவில் சில விரிசல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** தேவையற்ற பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். பொறுமையோடு அமைதியைக் கையாளுங்கள்.

**துலாம்:** பெண்களால் தன இலாபங்கள் உதவிகள் உண்டு. தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில், வியாபாரம் உங்கள் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** தந்தையின் உடல் நிலை மற்றும் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். நண்பர்களால் சிரமங்களை அனுபவிப்பீர்கள்.

**மகரம்:** கோபத்தை அடக்கிக் கொள்வதால் பெரிய பெரிய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். மனக் கட்டுப்பாடு அவசியம்.

**கும்பம்:** காதல் விவகாரங்களில் சிற்சில முட்டுக்கட்டைகள் வந்து பின் தீரும். வியாபாரத்தில் அக்கறையுடன் செயல்படுங்கள்.

**மீனம்:** நீண்ட நாள் உங்கள் கனவு இன்று பழிக்கப் போகின்றது. எதிரிகள் மண்டியிட்டு சரணாகதி அடைவார்கள்.

**திதி:** சதுர்தசி பி.இ.4.49 வரை பின் அமாவாசை
**நட்சத்திரம்:** மகம் பி.இ.2.01 வரை பின் பூரம்
**யோகம்:** மரண யோகம் பி.இ.2.01வரை பின் அமிர்த சித்தம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 9.02 – 10.02 மணிவரை
**ராகு காலம்:** 12.02 – 1.32 மணிவரை
**எமகண்டம் :** 7.32 – 9.02 மணிவரை
**குளிகை :** 10.32 – 12.02 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** மாத சிவராத்திரி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





களனி பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக் கிளையின் 7ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கொள்ளுப்பிட்டி வொன்டர் ஹோட்டலில் 10ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக களனி பல்கலைக்கழக பழைய மாணவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருமான கலாநிதி நந்தலால் வீரசிங்க கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வில் கொழும்பில் வாழும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் அடுத்த நடப்பாண்டுக்கான தலைவராக ஜெயமுன திசாநாயக்க, செயலாளராக ரீ.சரன்பந்து, பொருளாளராக எல்.தர்மசேன மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.அமீன் உட்பட 21 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் முதியோர் இல்லத்துக்கான நிதி மற்றும் கம்பஹா, குருநாகல் உள்ளிட்ட கிளைகளுக்கு நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

படங்கள்: அஷ்ரப் ஏ சமத்

## விநாயகர் சதுர்த்தி விழா

வத்தளை இந்து மன்றம் நடத்தும் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு ஹெமில்டன் சுற்று வளாகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (17) காலை 7 மணிமுதல் 8.30 மணிவரை விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு தொடர்ந்து மூன்று தினங்கள் விநாயகப் பெருமானுக்கு விசேட ஹோமம், அலங்கார பூஜைகள், பிரசாத படையல் செய்யப்பட்டு கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம்பெறும்.

புதன்கிழமை (20)காலை பூஜைகள் இடம்பெற்று பகல் 1.00 மணிக்கு பெருமான் நகர் வலமாக காக்கைதீவு கடற்கரை பூங்காவுக்கு எழுந்தருளி அங்கும் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்று சமுத்திரத்தில் சங்கமமாவார். அதனைத் தொடர்ந்து பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இந்த விழா நாட்களில் உபயகாரர் முதற்கொண்டு சகல பக்த அடியார்களும் இப்புனித நிகழ்வில் பங்கேற்று பூஜைகளுக்குத் தேவையான பூக்கள், மாலைகள், பிரசாதங்களை வழங்கி தங்களுக்கான நேர்த்திக்காக விநாயகர் சிலைகளைப் பெறுவோரும் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

# இங்கிலாந்து உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் சந்திப்பு





ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராகப் புதிதாக நியமிக்கப்பட்ட அண்ட்ரூ பெட்ரிக் மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (12) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இரு நாடுகளின் பாராளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகளை மேலும் விருத்தி செய்வதற்கு தான் எதிர்பார்ப்பதாக ஐக்கிய இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் இதன்போது தெரிவித்தார். அத்துடன் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை - ஐக்கிய இராஜ்ஜிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது விளக்கமளித்ததுடன் ஐக்கிய இராஜ்ஜியம் வழங்கும் ஒத்துழைப்புகள் தொடர்பில் நன்றிகளைத் தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக, பாராளுமன்றப் பரிமாறல் வேலைத்திட்டங்கள், கட்சித் தலைவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்காக காணப்படும் சந்தர்ப்பங்கள், பாராளுமன்றத்திலுள்ள நிதிக் குழுக்கள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இரு தரப்பினரிடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

**பகிரங்க ஏல விற்பனை**

எமது சேவை மையங்களில் அடகுவைக்கப்பட்டு ஒப்பந்தக்காலம் முடிவடைந்தும், மீட்கப்படாத தங்க நகைகள் 2023 செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை எமது நகர காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

COMMERCIAL CREDIT

முகாமையாளர்
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி**
நகர காரியாலயம்
இல. 165, கின்சி வீதி
கொழும்பு 08

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 13ஆம் திகதி, புதன்கிழமை



# புட்டின் - கிம் ஜோங் சந்திப்பின் முடிவென்ன?

உலகம் முழுவதும் இயற்கை அனர்த்தங்கள் ஒருபுறம் வாட்டியெடுக்க மறுபுறம் போர்க்கலன்கள், இராணுவ ஆயுதங்களின் மூலமும் பேரழிவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்போது ரஷ்ய, வடகொரிய ஜனாதிபதிமார் நேருக்கு நேர் சந்தித்திருப்பது உலகப் போர் ஒன்றுக்கான கட்டியத்தை கூறுகிறது என்றாலும் மிகையில்லை.

இராணுவத்தில் வல்லரசு நாடுகளுக்கு சவால்விடும் அளவுக்கு வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகள், ஆயுத கண்டுபிடிப்புகள் என அதிரடி காட்டி வருகிறது. அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு அஞ்சாமல் தனது பாதையில் சென்றுக் கொண்டிருக்கும் வடகொரியா, இப்போது ரஷ்யாவுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறது. இந்த பின்னணியில்தான், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்திக்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ரஷ்யாவுக்கு சென்றுள்ளார். வடகொரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே சுமார் 1,180 கி.மீ. தொலைவு இருக்கும் நிலையில் கிம் ஜோங் உன் ரயிலில் பயணம் செய்து ரஷ்யா சென்றுள்ளார்.

அணு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து தொழிற்சாலைகளை கையாளும் அவரது உயர் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து, வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் செவ்வாயன்று ரஷ்யா வந்தடைந்தார். அங்கு அவர் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் ஒரு அரிய சந்திப்பை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யா - உக்ரைன் போர் முடிவடையாமல் நீடிக்கும் நிலையில், இந்த சந்திப்பினால் மேற்கத்தேய நாடுகள் பதற்றத்தில் உள்ளன.

வட கொரியாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனம், கிம் ஜோங் உன் (North Korea President Kim Jong UN) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தலைநகர் பியாங்யாங்கில் இருந்து தனது தனிப்பட்ட ரயிலில் ஏறினார் என்றும் அவருடன் நாட்டின் ஆளும் கட்சி, அரசாங்கம் மற்றும் இராணுவத்தின் குறிப்பிடப்படாத உறுப்பினர்களும் இருந்தனர் என்றும் கூறியது.

ரஷ்யாவின் தூர கிழக்கில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் கிம் மற்றும் புட்டினுக்கு இடையேயான சந்திப்பு, உலக அரங்கில் பெருகிய முறையில் தனிமைப்படுத்தப்பட்ட இரு தலைவர்களை ஒன்றிணைப்பது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உக்ரைனில் 18 மாதங்களுக்கும் மேலான போருக்குப் பிறகு ரஷ்யாவுக்கு புதிய வெடிமருந்துகள் மற்றும் குண்டுகள் தேவைப்படுகின்றன. அதே நேரத்தில் அணு ஆயுதத் திட்டம் தொடர்பாக பல ஆண்டுகளாக சர்வதேச தடைகளை எதிர்கொண்ட வட கொரியா, பணம் மற்றும் உணவு ஆகியவற்றில் இருந்து ஏவுகணை தொழில்நுட்பம் என அனைத்துக்கும் பற்றாக்குறை நிலையை சந்தித்து வருகிறது. இரண்டு தசாப்தங்களாக ஐ.நாவின் தடைகள், குறிப்பாக அணுசக்தி திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டத்துக்கு அணுகுவதைத் தடுத்துள்ள ஆயுதங்களை பியோங்யாங் பெறுவதற்கு இந்த சந்திப்பு வழிவகுக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடகொரிய ஜனாதிபதி விமானத்தில் பயணம் செய்யாமல் தவிர்ப்பது ஏன் என்றும் பலர் மனதில் கேள்விகள் எழலாம். இதற்கு காரணம், வடகொரியாவின் பாரம்பரியம்தான். வடகொரியாவை உருவாக்கிய கிம் இல் சுங் வழக்கமாக ரயிலில் தான் பயணிப்பார். அதே பாரம்பரியத்தை பின்பற்றி தற்போது கிம் ஜோங் உன் கூட ரயிலில் தனது பயணத்தை தொடங்கியுள்ளார். இந்த ரயில் சாதாரண ரயில் கிடையாது. இதில் மொத்தம் 20 பெட்டிகள் இருக்கின்றன. இந்த பெட்டிகள் அனைத்தும் குண்டு துளைக்காத வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது, வெடிகுண்டு தாக்குதலிலும் ரொக்கெட் லோஞ்சர் தாக்குதலிலும் சேதம் ஆகாது.

இந்தளவு தூரம் பயணித்து, மேற்குலகால் தனித்து விடப்பட்ட புட்டினை வடகொரிய ஜனாதிபதி சந்திக்கிறார் எனில், அதன் பின்னணியில் காரணங்கள் இல்லாமல் இருக்க முடியாது. அதிரடியாக செயற்படும் இருவர் இணைவது மேற்குலகுக்கு நிச்சயம் அச்சத்தை தரும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இது இன்னுமொரு பேரழிவுக்கு வித்திட்டுவிடக் கூடாது.

# நல்வாழ்வை உறுதிப்படுத்தக்கூடிய முறைமை மாற்றத்தை நோக்கி...!

முறைமை மாற்றத்தை வேண்டிநின்ற போராட்ட இயக்கம் ஒன்றரை வருடத்துக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக நோக்கப்படும் ஊழலை முடிவுக்கு கொண்டுவருவதில் கவனத்தைக் குவித்தது. போராட்ட இயக்கத்தில் இணைந்து கொள்வதற்கு நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் மக்கள் வந்தார்கள். விவசாய உற்பத்திகளை ஏற்றச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் உழவு இயந்திரப் பெட்டி மற்றும் லொறிகளிலும் வந்து மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். இவர்கள் எல்லோரும் மக்களின் நலன்களுக்காக பாடுபடுவதே அரசின் பொறுப்பு என்ற ஒரு பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்கள்.

ஆனால், திடீரென அந்த மக்கள் இப்போது அனுபவிப்பது நேர்மாறானதாக இருக்கிறது. ஊழல்வாதிகளான தலைவர்கள் டொலர்களைக் களவாடி வேறு நாடுகளில் பதுக்கிவைத்திருப்பதே எரிபொருட்கள், உணவு வகைகள் மற்றும் மருந்துப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு காரணம் என்று நம்பப்பட்டது. மக்களுக்காக தலைவர்கள் எதையும் விட்டுவைக்காமல் டொலர்கள் எல்லாவற்றையும் தங்களுக்காக எடுத்துக்கொண்டார்கள் என்ற உணர்வே மக்களை கொந்தளிக்க வைத்தது.

மக்களின் நலன்களில் அக்கறைகொண்ட அரசுக்கான களத்தை அமைத்த சுதந்திர இலங்கையின் தாபகத் தலைவர்களுக்கு முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்க தலைமை தாங்கினார். தற்சார்புடைய விவசாய சமூகத்தை உருவாக்கும் நோக்கைக் கொண்டிருந்த அவர் தான் தொடங்கிய பெரியதும் சிறியதுமான நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக அந்த விவசாய சமூகத்தை நலிவுறாது நீடித்திருக்கச் செய்யவிரும்பினார்.

சகல மட்டங்களிலும் உள்ள மக்களின் குறிப்பாக வறிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இந்த பயணத்தில் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவும் இணைந்துகொண்டார். கல்வியமைச்சராக இருந்த அவர் வறியவர்கள், பணக்காரர்கள் என்றோ நகரவாசிகள், கிராமவாசிகள் என்று எந்த பாகுபாடும் இல்லாமல் சகல மக்களுக்கும் நன்மைபயக்கக்கூடிய இலவச கல்வித்திட்டத்தைக் கொண்டுவரப் பாடுபட்டார்.

அந்த நேரத்தில் இடப்பட்ட அடித்தளங்களை அவர்களுக்கு பிறகு வந்த தலைவர்களும் நிலையானதாகப் பேணிக்காத்தார்கள். அதன் விளைவாக, 1970கள் மட்டில் இலங்கையர்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவுக்கு உயர்ந்த தேசிய வருமானத்தைக் கொண்டிருந்த வேறு நாடுகளின் மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை விஞ்சியதாகக் காணப்பட்டது.

வறியவர்கள், பணக்காரர்கள், நகரவாசிகள், கிராமவாசிகள் என்று பல்லாயிரக்கணக்கில் 'அரகலய' போராட்டத்தில் பங்கேற்ற மக்களிடம் சமுதாயம் முழுவதற்கும் பயனளிக்கக்கூடிய முறைமை மாற்றம் ஒன்றைக் காணும் இலட்சிய நோக்கைக் கொண்டிருந்தார்கள். அபிவிருத்தியின் பயன்களை ஊழல்தனமான வெளிநாடுகளில் தங்களது வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ய அனுமதிக்காமல் சகலருக்கும் கிடைக்கக்கூடியதாக அந்த முறைமை மாற்றம் அமையவேண்டும் என்பதே மக்களின் இலட்சியமாக இருந்தது.

ஆனால், தற்போது இடம்பெறுகின்ற முறைமை மாற்றம் ஒரு பூகோள மற்றும் அரசியல் இடப்பரப்பில் வாழ்ந்தாலும் கூட மக்கள் ஏதோ வேறுபட்ட உலகங்களில் வாழ்பவர்கள் போன்று அவர்களுக்கு இடையில் பாரிய ஒரு இடைவெளியைத் தோற்றுவிப்பதாக அமைந்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகள் பேச்சுவார்த்தை மேசையில் பிரதிநிதித்துவப் படுத்தப்படாத எதிர்ப்பதற்கு வலிமையற்ற மக்கள் பிரிவினர் மீதே பெருமளவு சுமையை ஏற்றுகிறது. மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக அடுத்த 12 வருடங்களில் ஓய்வூதிய நிதியங்கள் அவற்றின் மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானதை இழந்துவிடும் என்று பேராசிரியர் சுமணசிறி லியனகே மதிப்பிட்டிருக்கிறார்.

**நியாயமற்ற சுமை**

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய வருமானவரி சட்டத்தின் விளைவாக தற்போது 14 சதவீத கோர்ப்பரேட் வரியுடன் சேர்த்துக் கொடுக்கப்படும் ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த இலாபம் 10.99 சதவீதத்தில் இருந்து 9.72 சதவீதமாகக் குறையலாம் என்று மத்திய வங்கியின் மதிப்பீட்டு அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார். அரச வங்கிகளும் தனியார் வங்கிகளும் வட்டியாக பெருந்தொகையை அறவிடும்போது ஏன் இந்தளவு குறைந்த வீதங்கள்? கோர்ப்பரேட் நிறுவனங்களைப் போன்று ஓய்வூதிய நிதியங்கள் மீது ஏன் வரி அறவிடப்படவேண்டும்? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஓய்வூதிய நிதியங்களின் பருமனை மாத்திரம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது அவற்றுக்கு குறைக்கப்பட்ட வட்டி வீதங்கள் அல்ல மிகையான வட்டி வீதங்கள் கொடுக்கப்படவேண்டும். சமூக நிதியங்கள் என்ற வகையில் அவற்றிடமிருந்து இலாபத்தில் இயங்கும் கம்பனிகளிடம் அறவிடப்படும் வரியின் மட்டத்துக்கு வரி அறவிடப்படவேண்டும்.

ஓய்வூதிய நிதியங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவை என்பதால் அரசாங்க முறைமைக்குள் இருக்கும் எவரும் அவற்றின் நியாயத்துக்காக பேசுவதற்கு எவரும் முன்வரமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஓய்வூதிய நிதியங்களுக்கான தொழிலாளர்களின் பங்களிப்பு தன்னியல்பாகவே அவர்களின் சம்பளங்களில் இருந்து கழிக்கப்பட்டு மாற்றப்படுகிறது. அந்த தொழிலாளர்களை பேச்சுவார்த்தை மேசையில் பிரதிநிதித்துவப்படுத்தி நியாயத்தைச் சொல்ல அவர்களின் பிரதிநிதிகள் இருந்தார்கள். அதன் விளைவாக ஏனைய நாடுகள் அவற்றின் கடன்களை மறுசீரமைத்தபோது செய்யாத காரியங்களை எமது அரசாங்கம் செய்வதை தடுக்க வழியேயில்லை.

உலகில் இலங்கை மாத்திரமே உள்நாட்டு நாணய பிணைமுறி மறுசீரமைப்பின் முழுச் சுமையையும் பிரத்தியேகமாக தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு நிதியங்கள் மீது ஏற்றும் ஒரே நாடு என்று (வெளியிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு) ஒக்ஸ்போர்ட் மற்றும் ஹார்வாட்டில் பயின்ற பொருளாதார நிபுணரான கலாநிதி நிஷான் டி.மெல் கூறுகிறார்.

கடந்த 25 வருடங்களில் உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பைச் செய்த 14 நாடுகளில் இலங்கையே வங்கிகளையும் தனியார் கடன் வழங்குநர்களையும் தவிர்த்து சமூகப்பாதுகாப்பு நிதியங்களை குறிவைக்கும் ஒரே நாடாக விளங்குகிறது.

அந்த 14 நாடுகளும் அவற்றின் வங்கிகளை மறுசீரமைப்புக்கு உட்படுத்தியிருக்கின்றன என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகள் காட்டுகின்றன. அவற்றில் ஒன்பது நாடுகள் தனியார் நிதி நிறுவனங்களையும் மறுசீரமைப்புக்குள்ளாக்கின. இரு நாடுகள் மாத்திரமே சமூகப் பாதுகாப்பு நிதியங்களை மறுசீரமைத்தன. ஆனால் அவற்றில் எந்த நாடுமே ஓய்வூதிய (சமூகப் பாதுகாப்பு) நிதியங்களை மாத்திரம் மறுசீரமைப்புக்குட்படுத்திவிட்டு மற்றைய துறைகளை சுதந்திரமாக விட்டதில்லை.

தொழிலாளர்கள் தங்களது ஓய்வுக்குப் பிறகு பெறக்கூடிய பயன்கள் மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியத்தை அரசாங்கம் இலக்கு வைத்திருக்கிறது. ஆனால் கடன் மறுசீரமைப்பின் இந்த சுமையில் இருந்து வங்கிகளையும் பெரிய கம்பனிகளையும் விட்டுவைக்கிறது. இது அமெரிக்காவில் நடந்தது. ஆனால் இலங்கை அமெரிக்காவை பின்பற்ற முடியாது அந்தநாடு மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக இருக்கின்ற அதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் சின்னச்சிறியதாகும். அதன் ஆள்வீத வருமானமும் மிகவும் சிறியதாகும்.

2008ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் தீவிர வலதுசாரி அரசாங்கத்தின் கீழ் அமெரிக்காவில் நிதி நெருக்கடியொன்று ஏற்பட்டது. பெரிய வங்கிகளை அரசாங்கம் பிணையெடுத்தது. ஆனால் அதுவும் கூட பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுத்தது. அமெரிக்கர்கள் தினமும் தங்களது வேலையை இழந்துகொண்டிருந்தவேளையில், தங்களது வீடுகளையும் வாழ்நாள் சேமிப்புகளையும் இழந்துகொண்டிருந்த வேளையில் கொழுத்த பணக்கார வங்கிகளை (அவற்றை பிறகு ஜனாதிபதியாக வந்த பராக் ஒபாமா Fat - Cat என்று அழைத்தார்) அரசாங்கம் நெருக்கடியில் இருந்து விடுவிக்கவேண்டுமா என்று கேள்வியெழுப்பிய மக்கள் வோல்ஸ்றீட் முற்றுகை போராட்டத்தை தொடங்கினார்கள். அவர்களைக் கலைக்க பல மாதங்கள் எடுத்தன.

**நிலைபேறான தன்மையை உறுதி செய்தல்**

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தவிர்க்கப்பட்டது மாத்திரமல்ல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட புறக்கணிக்கப்பட்டார்கள்.

ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை நிதியம் ஓய்வூதிய நிதியங்களை மாத்திரம் குறிவைக்கும் கடன் மறுசீரமைப்பின் அநீதியை இல்லாமல் செய்யப்போவதாக எதிர்க்கட்சி பேச்சாளர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதே அரசாங்கத்தின் அணுகுமுறையில் உள்ள பிரச்சினையாக இருக்கும். தீர்மானத்தில் சம்பந்தப்படுத்தப்படாதவர்களும் கடன் மறுசீரமைப்பு நியாயமற்றது என்று உணருபவர்களும் ஆதரவை வழங்க விரும்பப்போவதில்லை. பதிலாக அநீதி ஒன்று செய்யப்பட்டுவிட்டது என்று நம்பக்கூடியவர்கள் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மலினப்படுத்துவதற்கு முயற்சிப்பர்.

மறுபுறத்தில், தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டால் நீண்டகால நோக்கில் நிலைபேறான தன்மையை உறுதிசெய்யக்கூடிய விட்டுக்கொடுப்புகளுக்கு வசதியாக இணக்கப்பாட்டைக் காணக்கூடிய பகுதிகளை அவர்களினால் சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கும்.

பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தின் நிலைபேறான தன்மையை உறுதிசெய்யும் முகமாக எதிர்க்கட்சிகளின் குரல்களுக்கு அரசாங்கம் செவிமடுக்கவேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலமாக, அரசாங்கம் மாறும் பட்சத்தில் பொருளாதாரம் தொடர்பில் கொள்கை மாற்றம் ஏற்படக்கூடிய ஆபத்தை தணிக்கக்கூடியதாக இருக்கும். அரசாங்கம் மாறும்போது பொருளாதாரக் கொள்கையும் மாறினால் எதிர்காலத்தில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும்.

பொருளாதார மீட்சி, நிலையுறுதிப்படுத்தல் மற்றும் வளர்ச்சிப் பாதையில் இருந்து கவனத்தை திருப்புவதற்கு தேர்தல்களை அனுமதித்தால் முன்னயதையும் விட படுமோசமான புதிய நெருக்கடி ஏற்படும் என்று முதலீட்டு வங்கிக் குழுமம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மெய்நிகர் வழி கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி எச்சரிக்கை செய்திருக்கிறார். இலங்கையின் தேர்தல் கலண்டர் நாடு முன்னெடுத்த சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டங்களின் கீழான முன்னேற்றங்களை மறுதலையாக்கிய வரலாறு ஒன்று இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெருமளவுக்கு கவனத்தைப் பெற்றிருக்கும் அந்த உரையில் கலாநிதி குமாரசுவாமி, "இலங்கையில் தேர்தல் இடம்பெற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் பெரும்பாக பொருளாதாரக் கொள்கைகள் சீர்குலைவுக்கு உள்ளாகியிருக்கின்றன. தற்போதைய உதவித்திட்டத்துக்கு முன்னதாக 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டங்களை பெற்றிருக்கிறது. தற்போது செய்திருப்பதைப் போன்று அந்த திட்டங்களின்போது பல தடவைகள் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதில் நாம் முன்னேற்றத்தைக் கண்டோம். ஆனால் தேர்தல் ஒன்று நெருங்கியதும் அந்த முன்னேற்றம் மறுதலையாகிப்போய்விட்டது" என்று குறிப்பிட்டார். ஜனநாயகம் ஒன்றிலே, தற்போதைய பொருளாதாரத் திட்டத்தின் ஆதரவாளர்கள் வாதிடக்கூடியதைப் போன்று தேர்தல்களை இடைநிறுத்துவது அரசாங்கத்தைப் பொறுத்தவரை பதிலாக இருக்கமுடியாது. இது மக்களினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு ஜனநாயக மறுப்பாக இருக்கும். சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தில் அரசாங்கம் தங்கியிருக்கிறது.

சகலரினதும் குறிப்பாக வறியவர்களினதும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் பிரிவினரினதும் நல்வாழ்வு தொடர்பில் நாட்டின் தாபகத் தலைவர்களுக்கு இருந்த நோக்கை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு ஏதுவாக அரசாங்கம் சகல தரப்புகளையும் அரவணைக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடித்து, ஊழல் முறைகேடுகளினால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதுடன் மக்களின் உணர்வுகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

ஈஸ்ரர் தின தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கேட்கிறார் மைத்ரி... அப்படியொன்று நடக்காதென்ற தைரியத்தில் கேட்கிறார் போல...




# இன்றைய நாளில்...

- 1788 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுத்தலைவர் தேர்தலுக்கான திகதி பிலடெல்பியாவில் இடம்பெற்ற மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக நியூயோர்க் நகரம் அறிவிக்கப்பட்டது.
- 1898 – அனிபால் குட்வின் செலுலயிட் புகைப்படச் சுருளைக் கண்டுபிடித்தார்.
- 1948 – ஹைதராபாத்தில் நுழைந்து அதனை இந்திய ஒன்றியத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்க இந்தியத் துணைப் பிரதமர் வல்லபாய் பட்டேல் இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.
- 1949 – இலங்கை, இத்தாலி பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய நாடுகள் ஐ.நாவில் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடை செய்தது.
- 1956 – ஐ.பி.எம். முதல் தடவையாக வட்டு சேமிப்பை அறிமுகப்படுத்தியது.
- 1971 – மா சே துங்கின் இரண்டாவது தளபதி லின் பியாவோ இராணுவப் புரட்சி தோல்வியடைந்ததை அடுத்து சீனாவை விட்டு வெளியேறினார். இவர் சென்ற விமானம் மங்கோலியாவில் வீழ்ந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1995 – கொழும்பு இரத்மலானையில் இருந்து பலாலிக்கு இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற அன்டனோவ் ஏஎன்-32 வானூர்தி ஜா-எல அருகே கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த அனைத்து 81 பேரும் உயிரிழந்தனர்.
- 2007 – பழங்குடிகளின் உரிமைகள் குறித்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 2008 – டில்லியில் தொடர் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றதில் 30 பேர் கொல்லப்பட்டனர். 130 பேர் காயமடைந்தனர்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




## 11.09.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**பேரவாவி நீரின் தரப்பண்பை அதிகரிப்பதற்காக முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

ஜப்பானுக்கு சொந்தமான சிங்கப்பூர் நிறுவனமானGroepo Pte Ltd. (GPL) நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கமைவாக மைக்ரோ நனோ குமிழ் தொழில்நுட்பம், கரிமநார் உயிர் இழையத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடலுக்கு நேயமான என்சைம் பயன்படுத்தி பேரவாவிநீரின் தரப்பண்பை அதிகரிப்பதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று அரச நிறுவனங்கள் சில இணைந்து நடைமுறைப்படுத்துவதற்காக 2023.07.17 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய கருத்திட்ட முதலீட்டாளர்கள் சமர்ப்பித்த மேலதிக தகவல்களைக் கருத்தில் கொண்டு எமது நாட்டில் அனைத்து பல்கலைக்கழகங்களிலுமுள்ள நீரின் தரப்பண்பு தொடர்பான நிபுணர்கள், குறித்த அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய விசேட நிபுணத்துவக் குழுவினரின் இக்கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களுக்கமைய,ஐந்து ஆண்டுகளுக்கான உத்தேச முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும்,

பின்னர் எட்டப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் தொடர்ந்தும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானத்திற்கு எட்டுவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியும், நகரஅபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

**02. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடி வீட்டுத் தொகுதி உள்ளடங்கிய காணித்துண்டை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு வழங்கல்**

நாரஹேன்பிட்டி, காலிங்க மாவத்தையில் அமைந்துள்ள 144 வீட்டு அலகுகளுடன் கூடிய அடுக்குமாடித் தொகுதி 0.2761 ஹெக்ரயர் பரப்பளவு கொண்ட காணித்துண்டை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபைஅனுமதி வழங்கியுள்ளது. குறித்த அடுக்குமாடி வீட்டுத் தொகுதி உள்ளடங்கிய காணித் துண்டை கொழும்பு பல்கலைக் கழகத்தின் விடுதி வசதிகளுக்குப் பயன்படுத்துவதற்காக விடுவிப்பு பத்திரத்தின் மூலம் ஒப்படைப் பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

**03. கிளிநொச்சி, பூநகரி குளத்தில் சூரிய மின்சக்தி/மின்கலச் சேமிப்பு வேலைத் திட்டத்திற்கான முதலீட்டு முன்மொழிவு**

நாட்டில் துரித மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக 50 மெகாவற் அல்லது அதற்கும் அதிகமான இயலளவு கொண்ட மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்தித் துறையில் முதலிடுவதற்கு எதிர்பார்க்கின்ற முதலீட்டாளர்களின் விருப்புக் கோரல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைஅங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, 134 மெகாவற் மின்சாரத்தை வழங்குவதற்குஇயலுமாகும் வகையில் கிளிநொச்சி, பூநகரி குளத்தில் சூரிய மின்சக்தி/மின்கலச் சேமிப்புத் தொகுதியுடன் கூடிய 700 மெகாவற் சூரிய மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கான முன்மொழிவு யுனைட்டெட் சோலர் எனேர்ஜி எஸ். எல். தனியார் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1,727 மில்லியன் அமெரிக்க டொடலர்கள் மொத்த முதலீட்டுடன் கூடியதும் மற்றும் 100% வெளிநாட்டு முதலீடாக உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப் பட்டுள்ளதுடன், அதில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்ளூர் கருத்திட்டப்பகுதிக்குப் பயன்படுத்துவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. உத்தேச கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக 13.5மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக பூநகரிக்குளத்தைச் சுற்றி 03 அணைக்கட்டுகள் நிர்மாணிக்கப்பட்டு குறித்த குளத்தை புனரமைப்பதற்கும் கம்பனி முன்மொழிந்துள்ளது. அதற்குப் பதிலாக குறித்த குளத்தின் ஆழமற்ற பகுதியான 1,080ஏக்கர்களில் 700 மெகாவற் சூரிய மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்கு 35 வருடகால குத்தகை ஒப்பந்த அடிப்படையில் குறித்த கம்பனிக்கு வழங்குவதற்கு தற்போது வடக்கு மாகாண சபை,வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் போன்றன உடன்பாடு தெரிவித்துள்ளன. அதற்கமைய, யுனைட்டெட் சோலர் எனர்ஜி எஸ். எல். கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவை கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்வதற்கும், குறித்த முன்மொழிவை மதிப்பீடு செய்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவையால் நியமிக்கப் பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04.எதிர்வரும் 04 மாதங்களுக்கு ஒக்டேன் 92 Unl வகை பெற்றோல் கப்பல்கள் 04ஐ கொள்வனவு செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தம்**

2023.09.21 தொடக்கம் 2024.01.21 வரையான 04 மாதகாலத்திற்கு ஒக்டேன் 92 ருடே வகை பெற்றோல் கப்பல்கள் 04 ஐ கொள்வனவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்யப்பட்ட விநியோகத்தர்களிடம் நீண்டகால ஒப்பந்தத்திற்காக விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்காக 04 கம்பனிகள் விலைமுறிகளைச் சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப் பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக் கமைய குறித்த பெறுகையை சிங்கப்பூர் விடோல் ஏசியா கம்பனிக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 1979 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள கட்டளையைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற் காக சமர்ப்பித்தல்**

தற்போது காணப்படுகின்ற இறக்குமதி வரிக்கட்டமைப்புக் கமைய முடிவுப்பொருட்களாக இறக்குமதிசெய்யப்படும் அச்சு பூச்சுகளை விடவும் உள்ளூர் அச்சுப் பூச்சுகளின் உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒருசில மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும்போது அதிக வரி வகைப்படுத்தல்களுக்கு உட்படுவதால், உள்ளூர் அச்சு பூச்சு உற்பத்தியாளர்கள் பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய2023.07.21 அன்று அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளையை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மற்றும் குவைத் அரசுக்கு இடையிலான இருதரப்பு ஆலோசனைப் பொறிமுறையைத் தாபித்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வெளிவிவகார அமைச்சு மற்றும் குவைத் அரசின் வெளிவிவகார அமைச்சுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின்போது இருநாடுகளுக்குமிடையில் இருதரப்பு ஆலோசனைப் பொறிமுறையைத் தாபித்தல் தொடர்பாக உடன்பாடு எட்டப் பட்டுள்ளது. அதற் கமைய, இருநாடுகளுக்குமிடையில் அரசியல். பொருளாதார மற்றும் ஏனைய துறைகளில் நட்புரீதியான தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2023 ஆம் ஆண்டில் செப்டெம்பர் மாதம் நியூயோர்க் நகரில்நடத்தப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடருக்கு இணையாக இருதரப்பு ஆலோசனைப் பொறிமுறையைத் தாபித்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. அணு ஆயுத தடை பற்றிய ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளல்**

அணு ஆயுத தடை பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக 2021 டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2023 செப்டெம்பர் மாதம் நியூயோர்க் நகரில் நடத்தப்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தொடருக்கு இணையாக குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நடத்தப்படவுள்ள நிகழ்வில் இலங்கை அணு ஆயுத தடை பற்றிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. பால்நிலைச் சமத்துவம் தொடர்பான சட்டமூலம்**

பால்நிலைச் சமத்துவம் தொடர்பாக இலங்கையில் பிற்போக்கான நிலைமையில் காணப்படுவதுடன்,பால்நிலைச் சமத்துவமின்மைகளைக் குறைப்பதற்காக மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு படிமுறைகளை மேற்கொண்டு வருகின்றன. அதற்கமைய, பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டும் நோக்கில் தேவையான சட்ட ஏற்பாடுகளைஅறிமுகப்படுத்துவதற்கு சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2022.09.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தை பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதியால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.அதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான உடன்பாட்டை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**09. தேசிய மகளிர் ஆணைக்குழுவைத் தாபித்தல் தொடர்பான சட்டமூலம்**

பெண்கள் உரிமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் போன்ற விடயங்களுக்குத் தலைமைத்துவம் வகிப்பதற்கும் மற்றும் பால்நிலைச் சமத்துவம் மற்றும் சமநியாயம் தொடர்பான பிரச்சினைகளில் தலையிடுவதற்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பாராளுமன்றத்திற்குப் பரிந்துரைகளை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் மகளிர் ஆணைக்குழு எனும் பெயரிலான சுயாதீன ஆணைக்குழுவொன்றை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்குவதற்காக 2022.09.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தை பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதியால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான உடன்பாட்டை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**10. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டமூலத்திற்கான குழுநிலை விவாதத்தின்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்**

இலகுபடுத்தப்பட்ட சேர் பெறுமதி வரி முறைமை (SVAT) 2024.01.01 தொடக்கம் இரத்துச் செய்தல் உள்ளிட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டத்தை திருத்தம்செய்வதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெறுமதி சேர் வரியை மீளச்செலுத்தக்கூடிய வலுவான முறைமையொன்று இன்மையால் இலகுபடுத்தப்பட்ட சேர் பெறுமதி வரிமுறைமையை இரத்துச் செய்தால் தற்போது குறித்த முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு, குறிப்பாக, ஏற்றுமதியாளர்களுக்கு மோசமான காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளுக்குமுகங்கொடுக்க நேரிடுமென குறித்த தரப்பினரால் முன்மொழிவுள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதனால்,வலுவான முறைமையொன்று உருவாக்கப்படும் வரைக்கும் இலகுபடுத்தப்பட்ட சேர் பெறுமதி வரிமுறைமை இரத்துச் செய்தல் படிமுறையாக மேற்கொள்வது பொருத்தமானதெனக்கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்ற குழுநிலை விவாதத்தின் போது இலகுபடுத்தப்பட்ட சேர் பெறுமதி வரி முறைமையைஇரத்துச் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி 01.04.2025 எனதிருத்துவதற்கான முன்மொழிவைச் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியகொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11.இலத்திரனியல் வாகனங்கள் பொருத்துதலை ஊக்குவித்தல்**

பெரும்பாலான ஆசிய நாடுகள் இலத்திரனியல் வாகனங்கள், ப்ளக் இன் இரட்டைரக இலத்திரனியல்வாகனங்களைப் பொருத்துதல் மற்றும் தயாரிப்பதற்காக பூச்சிய (0%) இறக்குமதி வரி வீதம் போன்ற நேயம்மிக்க அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ்வாறான கவர்ச்சிகரமான ஊக்குவிப்புகள் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களை கவர்ந்திழுக்கக் கூடியதுடன்,எதிர்காலத்தில் ஏற்றுமதி ஆற்றல்வளங்களை உருவாக்க முடிவதுடன், சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய உலகளாவிய அளவுகோல்களுக்கமைய செயலாற்றுவதற்கும் இயலுமாகும். அதற்கமைய, உள்ளூரில் இலத்திரனியல் வாகனத் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை முதலீட்டுச் சபையுடன் தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அல்லது புதிதாக ஒப்பந்தம் செய்கின்ற கம்பனிகளால்இலத்திரனியல் வாகனங்கள், ப்ளக் இன் இரட்டைரக இலத்திரனியல் வாகனங்களைப் பொருத்துதல்தொழிற்றுறையில் குறைந்தபட்சம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டை மேற்கொள்கின்றமுதலீட்டாளர்களுக்கு 500Kwவலுக்கொண்ட தரப்படுத்தலுடன் கூடிய இலத்திரனியல் வாகனங்கள்,ஈருருளிகள் மற்றும் 3000cc வரையான இயந்திரக் கொள்ளளவு கொண்ட ப்ளக்-இன் இரட்டைரக இலத்திரனியல் வாகனங்களைப் பொருத்துவதற்காக புதிய பகுதியளவிலான (Semi – knockedDown/SKD) தொகுதியை இறக்குமதி செய்யும் போது CIF பெறுமதி சேர் பூச்சிய (0%) இறக்குமதிகட்டணத்தை விதிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. முதலீடுகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் இறக்குமதி வரியின்றி மீள்வலுவூட்டப்படும் (Recharge)செய்யக்கூடிய இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல்**

"தற்போது காணப்படுகின்ற முதலீட்டுச் சபை கம்பனிகள் மீள் முதலீடுகளுக்காக முதலீட்டாளர்களை தக்கவைத்துக் கொள்ளல் மற்றும் விரிவாக்கம் செய்தல் வேலைத்திட்டம்" மற்றும் "முதலீட்டு சபையின் தகவல்கள் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பத்தால் வலுவூட்டப்பட்ட சேவைக் கம்பனிகள் 100 வேலைத்திட்டம்" போன்ற வேலைத்திட்டங்களின் கீழ் முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்காககீழ்க்காணும் தகைமை பெறுகின்ற அளவுகோல்களைப் பூர்த்தி செய்த கருத்திட்டங்களுக்கு, காப்புறுதிமற்றும் கப்பல் கட்டணத்துடன் கூடிய பெறுமதி 30,000 அமெரிக்க டொலர்களை விஞ்சாதமீள்வலுவூட்டக் கூடிய (Recharge) புதிய வாகனமொன்று சுங்கக் கட்டண விடுவிப்பில் இறக்குமதிசெய்வதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

I. **தற்போது காணப்படுகின்ற முதலீட்டுச் சபை கம்பனிகள் மீள்முதலீடுகளுக்காக முதலீட்டாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளல் மற்றும் விரிவாக்கம் செய்தல் வேலைத்திட்டம்**

★குறித்த நிறுவனங்கள் முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டு05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல்

★வர்த்தக விரிவாக்கத்திற்காக முன்மொழியப்பட்ட குறைந்தபட்ச தொகை 03 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருத்தல்

★முன் மொழியப்படும் வர்த்தக விரிவாக்க வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 50தொழில் வாய்ப்புக்கள் உருவாக்குதல்

II. **முதலீட்டு சபையின் தகவல் கள் தொழிநுட்பம்/தகவல் தொழிநுட்பத்தால் வலுவூட்டப் பட்டசேவைக் கம்பனிகள் 100 வேலைத்திட்டம்**

★குறித்த வர்த்தகத்தால் குறைந்த பட்சம் 50 புதிய உள்ளூர் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டியதுடன், அவர்களில் 15 பேர் தொழிநுட்ப ரீதியான தகைமைகளைப் பெற்றுக் கொள்ளல்.

★குறைந்தபட்ச முதலீடு 250,000 அமெரிக்க டொலர்களாக இருத்தல்

## நாணய மாற்று விதம் (12.09.2023)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.0062 | 212.9224 |
| கனேடியன் டொலர் | 231.6972 | 243.1767 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.6660 | 45.5994 |
| யூரோ | 338.5441 | 354.4525 |
| ஜப்பான் யென் | 2.1484 | 2.2486 |
| சிங்கப்பூர் டொலர் | 231.3694 | 242.6758 |
| ஸ்ரேலிங் பவுன் | 394.8818 | 412.0513 |
| சுவிஸ் பிராங் | 352.1569 | 371.2434 |
| ஐ.அ. டொலர் | 316.5407 | 327.9261 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 854.8742 |
| குவைட் | குவைட் தினார் | 1,044.4076 |
| ஓமான் | ஓமான் றியால் | 837.1321 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.3925 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.9296 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.7415 |

# புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

## சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல



இலங்கையில் மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

தற்போதுள்ள மருத்துவ பீடங்களின் தரத்திற்கமைவாக இந்த புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த சுகாதாரஅமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல,

"மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போதுள்ள மருத்துவ பீடங்களின் தரத்திற்கு ஏற்ப இந்தப் புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும். நமது நாட்டு மாணவர்களில் பலர் வெளிநாடுகளுக்கு கல்வி கற்கச் செல்கின்றார்கள். நமது நாட்டு மாணவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்நாட்டில் வழங்காமல் இருப்பது அவர்களுக்கு நாம் இழைக்கும் அநீதி ஆகும்.

நமது நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றியவர்களே இங்கும் பணியாற்றுவார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச தகுதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மருத்துவ பீடங்களின் தரத்திற்கு அல்லது அதற்கப்பால் இன்னும் அதிக தரத்துடன் இந்த மருத்துவக் கல்லூரிகள் இருக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தை முன்மொழிந்துள்ளோம். மேலும், அந்தக் கல்லூரிகளுக்கு மூன்று மருத்துவமனைகளும் இணைக்கப்படவுள்ளன.

உயர்கல்விக்காக ஒவ்வொரு துறைகளுக்கும் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதற்காக அரச வர்த்தமானி மூலம் குறைந்தபட்ச தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டில் சுமார் 13 மருத்துவ பீடங்கள் உள்ளன. அதற்கு சுமார் 2,000 மாணவர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுகின்றார்கள். உண்மையில் நமது நாட்டு மாணவர்களின் அறிவு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அடிப்படைத் தகுதிகளைக் கொண்ட மாணவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இணையும் மணவர்களில், 10% மாணவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசில்களை வழங்குமாறும் இந்தப் பல்கலைக்கழகங்களிடம் தனிப்பட்ட முறையில் கோரப்பட்டுள்ளன. அடிப்படைத் தகுதிகள் இருந்தும், தொடர்ந்தும் மருத்துவப் படிப்பைத் தொடர முடியாத மாணவர்கள் இந்நாட்டில் உள்ளனர். எனவே அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது உயர்கல்வியைத் தொடர்ந்தால் அதற்கும் எமது நாட்டுப் பணமே செலவிடப்படுகின்றது.

அதனால் குறைந்தபட்ச தகுதிகளைப் பெறும் மாணவர்களுக்கு எமது நாட்டிலேயே மருத்துவப் படிப்பைத் தொடரும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்படுகின்றது.

දේශීය ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5234
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,003,312.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 7 9 4 5 2 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3476
சீட்டிழுப்பு திகதி 2023.09.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,503,772.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 01 04 12 30
விசேட எழுத்து I
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33226

ஒவ் Lucky 7 லக்ன
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 3 4 5 3 9 1
திகதி 11.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0060
L7 இலக்கம் 1 4
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,825,305.92

தன நிதானய
தேதி 2023/09/11
சீட்டிழுப்பு இலக்கம் 1264
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,546,752.80
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 08 49 62 76
விஷேட ஆங்கில எழுத்து O
Double Chance இலக்கம் 06517

ராசிசுப பலன் Handahena
சீட்டிழுப்பு இலக்கம் 543
சீட்டிழுப்பு திகதி 2023-09-11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,444,967.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 26 27 30 37
விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1582
11/09/2023
51152
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,420,480.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 09 12 47 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறுகோரி கோணாவில் மகா வித்தியாலய மாணவர்கள் போராட்டம்

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கோணாவில் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுவதனால் அதனை நிவர்த்திசெய்ய கோரி மாணவர்கள் தங்களது பெற்றோர்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டமானது நேற்றுக் காலை 08 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது. ''ஆசிரியர்களை நியமிக்கும் வரை ஆசிரியர் இடமாற்றம் வழங்காதே, பற்றாக்குறையான ஆசிரியர்களை நியமிக்கவும்'' உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மாணவர்கள், பெற்றோர்களின் போராட்ட இடத்துக்கு வருகைதந்த கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பணிமனையின் அதிகாரிகள், பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வருகைதராத பட்சத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய பொருத்தமான வளவாளர்களை நியமிப்பதாக எழுத்துமூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னரே மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு வகுப்புகளுக்குச் சென்றுள்ளனர்.

# பாடசாலை மாணவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய அதிபர் வழக்கில் 9 ஆண்டுகளின் பின் தீர்ப்பு

*மன்னார் நகர் நிருபர்*

பதின்ம வயது மாணவனை பாரதூரமான பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்திய பாடசாலை அதிபருக்கு 07 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து மன்னார் மேல்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

“தனது கட்டுக்காவலிலுள்ள மாணவர்களை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்குவது பாரதூரமான குற்றமாகும். தற்போது அதிகரித்துவரும் இத்தகைய செயற்பாடுகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படுவது அவசியம்” என்று மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் தீர்ப்பில் கோடிட்டு காட்டினார்.

2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி மன்னார் பாடசாலையில் கற்ற 10 வயது மாணவன் பாலியல் துன்புறுத்தலுக்குட்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவன் கல்வி கற்ற பாடசாலை அதிபர் கைதுசெய்யப்பட்டார்.

மன்னார் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்க முறையற்ற விசாரணைகளின் பின் சட்ட மா அதிபரால் மன்னார் மேல் நீதிமன்றில் பாடசாலை அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்ற நிலையில் நேற்று முன்தினம்(11) வழக்கு தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டது. எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிகழ்வு, நிபுணத்துவ சாட்சியங்கள் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கப்பால் வழக்குத் தொடுநரால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் குற்றவாளி எனக் கண்டு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

“குற்றவாளிக்கு 07 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படுகிறது. செலுத்தத்தவறின் 06 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 06 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்” என்றும் மன்னார் மேல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பளித்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி செஸான் மஹ்பூம் வழக்கை நெறிப்படுத்தினார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# பொன். சிவபாலனின் 25ஆவது நினைவு தினம் சித்தங்கேணியில் அனுஷ்டிப்பு



*பு.கஜிந்தன்*

யாழ்ப்பாண மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளரும், சிறந்த அடுக்குமொழிப் பேச்சாளரும், கவிஞரும், பொதுநலன் அக்கறையாளருமான அமரர் பொன். சிவபாலனின் 25ஆவது வருட நினைவு தினம் நேற்று முன்தினம் (11) மாலை 5.30 மணியளவில் அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

குடும்ப உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தலின்போது திருவுருவப் படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர சபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப் பட்டார்.

அவருடன் யாழ்ப்பாண நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ்ப்பாண நகர பிரிகேடியர் மேஜர் கெப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ்ப்பாண மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதி பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய 12பேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

# கோவிற்குடியிருப்பில் ஒளிராத தெரு விளக்குகள்

## மாற்றியமைக்குமாறு கோரிக்கை

*சாவகச்சேரி நிருபர்*

சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு வட்டாரத்தில் ஒளிராத நிலையில் காணப்படுகின்ற தெரு விளக்கு களை விரைவில் மாற்றியமைக்குமாறு கோவிற் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்- சாவகச்சேரி நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் எமது கிராமத்தில் தெரு விளக்குகள் மாற்றப்பட வேண்டிய இடங்களை அடையாளப்படுத்தி நகர சபைக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். இருப்பினும், இதுவரை மேற்படி கோரிக்கை கடிதத்துக்கு நகர சபையால் எவ்விதமான பதிலும் அனுப்பப்படவில்லை. தெரு விளக்குகளும் திருத்தப்படவில்லை.

மாரி காலம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் திருட்டுகள், விபத்துகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக ஒளிராத நிலையில் காணப்படுகின்ற தெரு விளக்குகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியமானதாக காணப்படுகிறது – என சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கான காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்திய தமிழ் மக்கள்



தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்காக தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்படவிருந்த காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று (12) காலை தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு அண்மையாக கூடிய தமிழ் மக்கள், நில அளவை திணைக்களத்தினரை தடுத்து நிறுத்தினர்.

காணி உரிமையாளர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டு, தமது காணியை மீள வழங்க வேண்டுமென வலியுறுத்தினர். இதையடுத்து, நிலஅளவை திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

குறித்த போராட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், சி.சிறிதரன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# காணாமல்போயிருந்த புதுமணத் தம்பதிகள் இரண்டு நாட்களின் பின் கண்டுபிடிப்பு

*ராமு தனராஜா*

ஹல்துமுல்லை, பம்பரகந்த யலதென்ன நீர்வீழ்ச்சிப் பகுதியின் காட்டுப்பகுதியில் 02 நாட்களாக காணாமல்போயிருந்த தம்பதி நேற்று முன்தினம் (11) பிற்பகல் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தின்மூலம் கண்டுபிடித்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதியில் காணாமல்போயிருந்த நிலையில், கருவலகஸ்வெவ நெலும்வெவ நவோத்யா மதுரங்க (வயது24) மற்றும் தம்புத்தேகம செவ்வந்தி சந்திபனி (வயது22) ஆகிய புதுமணத் தம்பதிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த நவோத்யா மதுரங்க, ''எங்களுக்கு திருமணமாகி மூன்று மாதங்களே ஆகின்றன. கடந்த 8ஆம் திகதி தான் வீட்டிலிருந்து வந்து பாஓரகண்ட் வாங்கெடிகல பகுதியில் முகாமிட்டிருந்தோம். அந்தப் பகுதியில் இடம் விட்டு இடம்பெயர்ந்து கொண்டிருந்தோம். பின்னர் காட்டில் எந்தப் பாதையில் செல்வதென்று கண்டுபிடிக்க முடியாததால் நாங்கள் இருக்கும் இடத்தை எங்கள் சின்னம்மாவுக்கு ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தை அனுப்பி வைத்தோம்.

நாங்கள் அங்கு இருக்கும்போது எங்களின் போன்களின் பேட்டரிகளும் செயலிழந்து போயின. அங்கிருந்தபோதுதான் பொலிஸார் எங்களைத் தேடி வந்தனர்.

அப்போது தான் தெரிந்தது எங்கள் சின்னம்மா நாங்கள் அனுப்பிய ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தை ஹல்துமுல்ல பொலிஸாருக்கு அனுப்பி அவர்கள் அதன்மூலம் எங்களைக் கண்டுபிடித்தனர் என்பது.

இரு இரவுகளையும் இருளில் கழித்த எங்களைக் காப்பாற்றிய ஹல்துமுல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு நாம் பல தடவைகள் நன்றி தெரிவிக்கின்றோம்'' – என மதுரங்க மேலும் தெரிவித்தார்.

# கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவர் அதிரடிப் படையினரால் கைது

*ராமு தனராஜா*

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை பூல்வத்தை பகுதியில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருப்பதாக பசறை ஆக்கரத்தன்ன விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பசறை பூல்வத்தை பகுதிக்கு விரைந்து சென்ற அதிரடிப்படையினர், சந்தேகத்துக்கிடமான 22 வயது நபரை சோதனைக்குட்படுத்தியபோது அவரிடமிருந்து 58,500 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபரையும் பசறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நேற்றைய தினம் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

# வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைப்பு





*இரத்தினபுரி நிருபர்*

இரத்தினபுரி மாவட்டத்தில் மிகவும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 500 பேருக்கு புலமைப்பரிசில் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்கவின் 54ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டே இவ்வாறு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை(09) ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் நிவித்திகல ராஜகீய வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மேலும் இதனை முன்னிட்டு மத வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளரும் தொழிலதிபருமான செல்வம் ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் 1,786 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் இவ் வருடத்தினுள் ஆயிரத்து 786 டெங்கு நோயாளர்கள் காணப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் அத்தியட்சகர் கபில கன்னங்கர நேற்று (12) தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தின் சுகாதார முன்னேற்றம் குறித்த தகவல்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தகவல் தருகையில், கடந்த ஏனைய மாதங்களை விட இரத்தினபுரி மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதத்தில் மழை பெய்ததால் டெங்கு அதிகரிப்பு ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் நுளம்புகளின் முட்டைகள் அழிக்கப்படுவதால் இவ்வாறு டெங்கு ஏற்படும் வீதம் கட்டுப்படுத்தப்படுகிறது.

இதற்கிணங்க, இரத்தினபுரி மாவட்டத்தில் ஜூன் மாதத்தில் 286 நோயாளர்களும் ஜூலை மாதத்தில் 207 நோயாளர்களும் ஓகஸ்ட் மாதத்தில் 174 நோயாளர்களும் காணப்பட்டதாகவும் இவ்வாறு எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், டெங்கு கட்டுப்பாட்டு முயற்சிகள் நிறுத்தப்படாமல் தொடர்ந்து நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ரத்வத்தை தோட்டத்தில் தகர்த்த வீட்டுக்கு பதிலாக 14 பேர்ச் காணி

## நவம்பர் 24இல் வழக்கு விசாரணை

மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தின் உதவி முகாமையாளரால் அடித்து நொறுக்கி தகர்த்தெறியப்பட்ட வீட்டுக்குப் பதிலாக அந்த வீட்டின் உரிமையாளர் மற்றும் அவரது மகனின் குடும்பத்தாருக்கும் தலா 7 பேர்ச் காணி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட உதவி முகாமையாளர் கட்டாய விடுமுறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஏற்காடுவ பெருந்தோட்ட யாக்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ள தோட்ட உதவி முகாமையாளர், தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் மற்றும் காவலாளி உள்ளிட்ட மூவருக்கு எதிராக மாத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# காசல்ரீ நீர்த்தேக்க மட்டம் உயர்வு





*மனுர சுதத் செல்லஹேவா*

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் மழை நிலைமை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது என அதிகாரி ஒருவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மழை அதிகமாகக் காணப்படும் நாட்களில் காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் அதிகம் வருவதுண்டு. இதனாலேயே இந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

எதிர்காலத்தில் மழை தொடர்ந்தும் பெய்தால் இங்கு நீர்வரத்து அதிகமாகும். இங்கு நீர்மின்சாரத்தை அதிகம் உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்படும் - என்றார்.

## சினிமா பாணியில் அதிரடி சம்பவம்:
# பொலிஸாருக்கு போதை கலந்த தேநீர் கொடுத்து விட்டு தடுப்பிலிருந்து தப்பியோட முயன்ற ஹரக் கட்டா
### ஒத்துழைத்த பொலிஸ்காரர் தலைமறைவு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தென்னிலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவரும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரருமான நடுன் சிந்தக அல்லது ஹரக் கட்டா, விசேட அதிரடிப்படையின் உப பொலிஸ் பரிசோதகரின் துப்பாக்கியை பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 6ஆவது மாடியில் உப பொலிஸ் பரிசோதகர் சந்தேக நபருடன் சண்டையிட்டு மிகுந்த பிரயத்தனப்பட்டு அவரை அடக்கியதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா தப்பிக்க உதவியதாக சந்தேகிக்கப்படும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணிபுரியும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சம்பவத்தின் பின்னர் எவருக்கும் தெரிவிக்காமல் தப்பிச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் மதியம் 12.30 மணியளவில் ஹரக் கட்ட நான்காவது மாடியில் இருந்து 6ஆவது மாடியில் உள்ள பொது முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கழிவறைக்கு செல்ல வேண்டும் என ஹரக் கட்டா கூறியதையடுத்து, தற்போது தலைமறைவாகியுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் அவரை கழிப்பறைக்கு அழைத்து சென்றுள்ளார். கழிப்பறைக்குள்ளிருந்து திரும்பி வந்தபோது இது நடந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிளுடன் கழிவறையில் இருந்து ஹரக் கட்டா வந்ததாகவும் உடனடியாக அங்கிருந்த சப்-இன்ஸ்பெக்டரின் மீது பாய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

ஹரக் கட்டாவுடன் சப்-இன்ஸ்பெக்டர் போராடி உதவி கோரி கூச்சலிட்டதாகவும் சில நிமிடங்களில் சம்பவ இடத்துக்கு வந்த ஏனைய பொலிஸார், ஹரக் கட்டாவை பிடித்து அழைத்துச் சென்றதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



கழிவறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஹரக் கட்டாவின் கைவிலங்கு கழற்றப்பட்டு, கைவிலங்குடன் வருவதைபோல பாவனை செய்துள்ளார். உப பொலிஸ் பரிசோதகரை தாக்கி, அவருக்கு கைவிலங்கிட்டு, அவரது துப்பாக்கியை பறித்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டபோதே ஹரக் கட்டா பிடிக்கப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பொலிஸார் குறைவாகவே கடமையில் இருப்பதாகவும் இதையெல்லாம் அவதானித்தே சந்தேக நபர் இவ்வாறு தப்பிச் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உப பொலிஸ் பரிசோதகரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் செல்ல தயாராகி இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஹரக் கட்டாவுக்கு தப்பிச் செல்ல உதவ முயன்றதாகக் கூறப்படும் சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளைத் தேடுவதற்காக அவரது கிராமமான திருகோணமலைக்கு பல பொலிஸ் குழுக்கள் சென்றுள்ளன. ஆனால் அவரும் வீட்டில் இல்லை.

தற்போது காணாமல்போன கான்ஸ்டபிள், சம்பவத்துக்கு முன்னர் அந்த மாடியில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒரு வகை ரொபி வழங்கியதாகவும் அதிகாரப்பூர்வமற்ற பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கசப்பாக இருந்ததால் பலர் சாப்பிடவில்லை. இதையடுத்து, அந்த கான்ஸ்டபிள் தேநீர் தயாரித்து பரிமாறினார்.

தேநீர் அருந்திய உத்தியோகத்தர்கள் போதையில் இருந்ததாகவும் தலைவலி ஏற்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹரக் கட்டா சிக்கியதும், அவருக்கு உதவிய கான்ஸ்டபிள் 4ஆவது மாடிக்கு ஓடிச்சென்று கைத்தொலைபேசியை எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார். அவர் தவறுதலாக தனது கைத்தொலைபேசியை விட்டுவிட்டு, இன்னொருவருடைய தொலைபேசியை எடுத்துக் கொண்டு தப்பியோடி விட்டார்.

தப்பியோடிய கான்ஸ்டபிள் தங்கியிருந்த தாணிக்கடை பொலிஸ் விடுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அவரது ஆடைகளுக்குள் போதைப்பொருள் வகை இருந்துள்ளதுடன், உத்தியோகத்தர்களுக்கு தேநீர் கொடுக்கும்போது இந்த போதைப்பொருளை பயன்படுத்தியிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அதன்படி, இந்த போதைப்பொருள், ரொபி ஆகியவை பரிசோதனையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, தப்பியோடிய பொலிஸ் உத்தியோகத்தரின் காதலி என்று கருதப்படும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

தப்பியோடிய பொலிஸ் கான்ஸ்டபிள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் 071-85917774 அல்லது 071-8594929 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறது.

# புதையல் தோண்டியோருக்கு புத்தளத்தில் விளக்கமறியல்



ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - கருவலகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவநுவர பிரதேசத்தில் புதையல் தோண்டியதாக சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நான்கு பேர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் புதையல் தோண்டுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் நான்கு பேரை கைது செய்தனர்.

மேலும், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட பெக்கோ இயந்திரம் உள்ளிட்ட ஏனைய பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நான்கு பேரும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரிட்டன் புதிய உயர்ஸ்தானிகர் அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு



பிரித்தானிய புதிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தார்.

குறித்த சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் (10) இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து புதிய உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இங்கிலாந்து அரசாங்கத்தின் ஆதரவையும் அமைச்சர் வேண்டிக்கொண்டார்.

மேலும் இச் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், சுற்றுலா மற்றும் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியின் புதிய செயலராக துஷ்மந்த நியமனம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (11) நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அவசர மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கட்சியிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் முதன் முறையாக மத்திய செயற்குழு கூடியிருந்தது.

தன்னைக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கும் தலைவர் மைத்ரிபால சிறிசேனவின் தீர்மானத்தை இரத்துச் செய்யக்கோரி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்த நிலையில், அதனை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

அத்துடன், பதில் பொதுச்செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட சரத் ஏக்கநாயக்க அந்தப் பதவியில் செயற்படுவதற்கும் நீதிமன்றம் தடை பிறப்பித்திருந்தது.

இவ்வாறான நிலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் கூடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

# நான்கு வயது சிறுமி திடீரென உயிரிழப்பு
### ஹொரணையில் பரிதாபம்



ஹொரணை - திகேனபுர பகுதியில் உறங்கிக்கொண்டிருந்த நான்கு வயது சிறுமியொருவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் திடீரென உயிரிழந்துள்ளதாக ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹொரணை, திகேனபுர பகுதியில் வசித்து வந்த சசுகி அனன்யா செசாந்தி என்ற நான்கு வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி வழமைபோன்று தனது தாயுடன் உறங்கிய நிலையில், சிறுநீர் கழித்தமையினால் உடைகளை மாற்றத் தாயார் தயாரானபோது, சிறுமியின் உடல் உயிரற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து தனது கணவருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமியை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

ஹொரணை தலைமையக பொலிஸ் நிலையத்தின் பதில் கட்டளைத் தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் பராக்கிரம குணரத்னவின் பணிப்புரையின் பேரில் உயிரிழப்பு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# விபத்துகளால் தொடரும் சோகம்: 8 மாதங்களில் 1,613 பேர் உயிரிழப்பு

இலங்கையில் இந்த வருடத்தின் முதல் எட்டுமாத காலப்பகுதிக்குள் இடம்பெற்ற ஆயிரத்து 427 விபத்துகள்மூலம் ஆயிரத்து 613 பேர் உயிரிழந்திருப்பதாக பொலிஸ் போக்குவரத்து நிர்வாக பணிப்பாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இவற்றில் 632 மோட்டார் சைக்கிள் விபத்துகளாகும். கடந்த வருடத்தில் இரண்டாயிரத்து 418 விபத்துகள்மூலம் 2ஆயிரத்து 538 பேர் உயிரிழந்திருப்பதாக நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஆயிரத்து 09 மோட்டார் சைக்கிள் விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அத்தோடு 171 பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாகி உள்ளனர். இவர்களில் நான்கு பேர் உயிரிழந்தனர். 28 பிள்ளைகள் படுகாயமடைந்தனர். 15 பேர் நீண்டகால உபாதைக்கு உள்ளானதாக பிரதி பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடத்தில் பாதுகாப்பான தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்த ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 684 பேர் சட்டத்தின் பிடியில் சிக்கியதாக அவர் குறிப்பிட்டார்.



**கொழும்பு கொட்டாஞ்சேனை கலைமகள் வித்தியாலயத்தின் வாசிகசாலைக்கு ஒரு தொகுதி நூல்களை அண்மையில் பாடசாலை அதிபர் முருகானந்தனிடம் புரவலர் புத்தக பூங்கா நிறுவனர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் கையளிப்பதையும் அருகில் பிரதி அதிபர் திருமதி ஆர்.லலிதா, புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா ஆகியோர் காணப்படுகின்றனர்.**

# நீதிமன்றில் ஆஜராகுமாறு வினோ கஜேந்திரனுக்கு அழைப்பாணை

முல்லைத்தீவு நீதிமன்றில் நாளை 14ஆம் திகதி வியாழக்கிழமை ஆஜராகுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு முல்லைத்தீவு பொலிஸார் ஊடாக நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையையும் மீறி பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில், பூஜை வழிபாடுகளுக்காக சென்ற பௌத்த குருமாரின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அவமானப்படுத்திய குற்றச்சாட்டுகளை முன்வைத்து சில பிக்குகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கமைவாக முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் உட்பட பலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு வழக்கு தொடர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில் முதன் முதலாக பாராளுமன்ற உறுப்பினருக்கு அழைப்பானை விடுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

# சட்டத்தரணிகள் சங்கம் சபாநாயகருடன் சந்திப்பு



சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் குழுவினருக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு (11) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் பாராளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியேயும் நீதிமன்றம், நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் நீதிபதிகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துகளால் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு அழுத்தம் ஏற்படுவது சட்டத்தரணிகள் சங்கத்தினால் அவதானிக்கப்பட்டிருப்பதாக நவரத்ன இங்கு சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக தற்பொழுது சேவையாற்றிவரும் நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு கருத்துகளை வெளியிடுவதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் இது விடயம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் கவலையைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கைவிடுத்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், இது குறித்த எழுத்துமூல கோரிக்கையையும் சபாநாயகரிடம் கையளித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதிபதிகள் உள்ளிட்ட நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு தான் தொடர்ந்தும் செயற்படுவதாகக் குறிப்பிட்டார். எனவே, எதிர்காலத்தில் இது தொடர்பில் உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்க எதிர்பார்த்திருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவர் நளிந்த இந்திரதிஸ்ஸ, செயலாளர் சட்டத்தரணி இசுரு பாலபட்டபெந்தி, பொருளாளர் சட்டத்தரணி சமத் ஜயசேகர, உதவிச் செயலாளர் சட்டத்தரணி மெஹ்ரான் கரீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



**வவுனியா, அல் - இக்பால் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானக் கண்காட்சி சிறப்பாக இடம்பெற்றது. வித்தியாலயத்தின் அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் வவுனியா தெற்கு வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜெய்கீசனின் பங்குபற்றுதலுடன் நேற்று இடம்பெற்றது. இதன்போது மாணவர்களது சிந்தனை மற்றும் புத்தாக்கத்தில் உருவான விஞ்ஞான கண்டுபிடிப்புகள், விஞ்ஞான ரீதியான பரிசோதனைகள், மற்றும் விஞ்ஞான ரீதியான விளங்கங்களை நிறுவும் படைப்புகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அயற் பாடசாலை ஆசிரியர்கள், அயல் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர்.** (படம்: வவுனியா)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சட்டவிரோத மீன்பிடியை தடுத்தல்; மட்டக்களப்பில் கலந்துரையாடல்



மட்டக்களப்பு

சட்டவிரோத மீன்பிடியை தடுப்பது தொடர்பாக விசேட கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் நேற்று (12) காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் ருக்சான் குருஸ், கடற்படை அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் த.தஜீவரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதரும் சட்டவிரோத மீன்பிடியாளர்களை தடுத்தல், சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் என்பன குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை துறைசார் அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் இதன்போது வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு கௌரவம்



பெரியநீலாவணை செய்தியாளர்

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலிருந்து நான்கு மாணவர்கள் மருத்துவத்துறைக்கும் 58 மாணவர்கள் ஏனைய துறைகளுக்கும் தகுதி பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தெரிவித்துள்ளார்.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு தொடர்ச்சியாக பாடசாலையில் இடம்பெற்று வருகின்றது.

முஹம்மட் மிஹ்லார் மரீன் அஹமட் (3A) , முஹம்மட் ரஹீம் அப்னான் அர்ஹம் (3A), அஜ்மல்கான் அப்ரின் சிம்ஹான் (2AB), நியாஸ்டீன் பாத்திமா சிறீன் (2AB) ஆகிய நான்கு மாணவர்கள் மருத்துவத் துறைக்கு தகுதிபெற்றுள்ளதுடன் விஞ்ஞானப் பிரிவிலிருந்து 27 மாணவர்களும் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து அஜ்மல்கான் அபீப் ஆஸிப் (3A), ஸபருல்லா ஆசிப் இலாஹி ( B2C) உட்பட நான்கு மாணவர்களும் கணிதப் பிரிவிலிருந்து இமாமுதீன் முஹம்மட் இஷ்பாஹ் (2BC), அப்துல் காதர் மஹ்பூஷ் அஹமத் (A2C) உட்பட எட்டு மாணவர்களும் வர்த்தகப் பிரிவிலிருந்து முஹம்மட் ஜுபைர் முஹம்மட் (ACA), கலிலுர் ரஹ்மான் அத்தீப் அஹமட் (BCS) ஆகிய இரு மாணவர்களும் கலைப் பிரிவிலிருந்து அப்துல் அஜீஸ் பாத்திமா அபா(3A),முஹம்மட் அஸ்வர் பாத்திமா மொர்னிஸ், அப்துல் கலீம் ஹிமா ஹஸ்மத் (2AB), முஹம்மட் பாயிஸ் பாத்திமா நுஹா (A2B), முஹம்மட் இஸ்ஹாக் அஸ்ஜா பானு (2AB), அப்துல் றஷீட் தன்சீர் அஹமட் (2AB), முஹம்மட் நசீர் பாத்திமா றிதா (A2B), முஹம்மட் ஸபீக் நிஹாஜ் அஹமட் (2AB), முஹம்மட் முபாரக் பாத்திமா சர்பா (2AB), நஸ்றுதீன் அம்றா (A2B), முஹம்மட் உவைஸ் பாத்திமா மிஹ்றா (ABC) உட்பட 17 மாணவர்களும் என 58 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலையில் இந்த சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னின்று செயற்பட்ட பாடசாலை அதிபர் எம்.எம்.ஹிர்பகான், மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர், பாடசாலையின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஏனைய ஆசிரியர்கள், பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவக் குழுவினர், பழைய மாணவர்கள், பாடசாலையின் வளர்ச்சியில் ஒத்துழைப்புகளை வழங்கி வரும் அபிமானிகள் என அனைவருக்கும் பாடசாலைச் சமூகம் தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றது.

# கல்லடியில் ஒன்றுகூடல்







மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் செயற்பாடுகளை தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கான திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் செயலமர்வும் மாதாந்த ஒன்றுகூடலும் மட்டக்களப்பில் நேற்று (12) இடம்பெற்றன.

மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட சர்வமதப் பேரவைக்கான உதவி இணைப்பாளர் எம்.ஐ. அப்துல் ஹமீட், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்கள், சமாதான செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றோடு இன ஐக்கியத்தைக் கட்டிக்காக்கும் விடயங்கள் பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

# கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகம் வெற்றி





அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக்கழகம் நடத்திய மர்ஹூம் ஏ.எம்.எம்.றசீன் விளையாட்டு உத்தியோகத்தர் ஞாபகார்த்த மென்பந்து மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை(11) இரவு இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் லக்கி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற 60 கழகங்கள் பங்கு கொண்டன.

அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர் மட்டுப்படுத்தப் பட்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று குடியிருப்பு போய்ஸ் அணியினர் 53 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹிக்மா அணியினர் 4.1 ஓவர்களில் 54 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றனர்.

இச்சுற்றுத்தொடரில் தொடர் ஆட்ட நாயகனாகவும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் ஹிக்மா அணியின் நிக்சி அஹமட் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ்,அனீஸ் மோல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ.அனீஸ், கவிஞர் ஒலுவில் அஸ்ஹர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# காட்டுயானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அப்துல்சலாம் யாசீம்

நீலாப்பொல கிராமத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சேருவில பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (12) காலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் நீலாப்பொல கிராமத்தைச் சேர்ந்த டி.டி.சில்வா (வயது 47) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கூலித்தொழிலில் ஈடுபடும் இவர் மணல் ஏற்றுவதற்காக சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த நபரின் மரணம் தொடர்பான விசாரணையை சேருவில திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.எச்.குணரத்ன மேற்கொண்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருவில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வாழைச்சேனையில் கலந்துரையாடல்





மட்டக்களப்பு

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூன்றாம் காலாண்டுக்கான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எஸ். எச். முஸம்மில் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளும் முன்னேற்றங்களும், நிதி ரீதியான முன்னேற்றங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ரமேஷ் காயத்ரி, கணக்காளர் ஏ. மோகனகுமார், உதவி பிரதேச செயலாளர் எம். ஏ. சி. றமீஸா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச். எம். எம். ருவைத், நிர்வாக உத்தியோகத்தர் எம். ஏ. எம். தாஹிர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சமூக சமயப் பணிகளில் ஈடுபட்டுவரும் நௌஷாட்





























கோணாவத்தை செய்தியாளர் றிபாஸ்

சமூக நடவடிக்கைகள், துறைசார் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான மையத்தின் CASDRO தலைவர் அன்வர் நௌஷாட் சமூக சமயப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வருகிறார்.

முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை தைக்கா நகர் பிரதேச அமைப்பாளராகவும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் ஆலோசகராகவும் செயற்பட்டுவரும் அன்வர் நௌஷாட், 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஓட்டமாவடி பிரதேசத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு வருகின்றார். இந்நிலையில், கடந்த 2006ஆம் ஆண்டு மட்டக்களப்பில் 24 உறுப்பினர்களைக் கொண்ட CASDRO அமைப்பை ஸ்தாபித்து பல்வேறு சமூகநல அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த இவர் அட்டாளைச்சேனையில் திருமணம் முடித்து வசித்து வருகிறார். ஓட்டமாவடி பிரதேசத்திலும் அட்டாளைச்சேனை பிரதேசத்திலும் பல்வேறு சமூகநல அமைப்புகள், சமய கலாசார நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள்,பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், சிவில் பாதுகாப்புக் குழு போன்ற பல்வேறு அமைப்புகளில் ஆலோசகராகவும் வேறு பிரதான பதவிகளையும் வகித்து சமூகத்தொண்டாற்றிவரும் இவர் அக்கரைப்பற்று அஸ்ஸபா கனிஷ்ட பாடசாலையின் அதிபருமாவார்.

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் இடைநிலைக் கல்வியையும் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் இளமாணிப் பட்டத்தையும் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டமேல் முகாமைத்துவ கற்கையையும் இந்தியாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கடந்த கொரோனா காலங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட காலப்பகுதியில் தொழிலை இழந்த வறிய மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் உலருணவுப் பொருட்கள் என்பவற்றை வழங்கியதோடு கடந்த காலங்களில் தர்கா நகரில் இடம்பெற்ற இன வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் கொழும்பு, அக்குறணை பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் நிர்க்கதிக்குள்ளான மக்களுக்கும் உலருணவு மற்றும் அத்தியாவசிய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார். கண்டி திகனவில் வன்முறையாளர்களினால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு தமது சொத்துகளையும் இழந்திருந்த நிலையில், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ள இவர், முஸ்லிம் காங்கிரஸின் தீவிர செயற்பாட்டாளராகவும் விளங்குகிறார். இவ்வாறாக சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இவர் அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க ஒருவராகத் திகழ்கிறார்.

# பிள்ளையான் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தை நோகடிப்பதை அனுமதியோம்!

## ஹரீஸ் எம்.பி.காட்டம்



மாளிகைக்காடு செய்தியாளர்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களின் உண்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்துகொண்டிருக்கும் போது போலியான கருத்துகளை வெளியிட்டு பிள்ளையான் போன்றவர்கள் மீண்டும் முஸ்லிம் சமூகத்தை நோகடிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இவர்களின் இத்தகைய போக்குகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

சமகால அரசியல் விவகாரம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் (11) மாலை கல்முனை காரியாலயத்தில் நடைபெற்றது.அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இது விடயத்தில் ஜனாதிபதி பக்கச்சார்பின்றி நடப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இச்சம்பவத்தை விசாரணை செய்வதற்காக ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு ஜனாதிபதி நியமிக்கவுள்ள விசாரணைக்குழுவுக்கு மேலதிகமாக புலனாய்வுப் பிரிவின் குழுவொன்றும் நியமிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

நாட்டை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ஆட்சி மாற்றத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளராகவிருந்த ஆசாத் மௌலானா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள கருத்தினால் மக்கள் பல்வேறு சந்தேகங்களுடன் இப்போது இருக்கிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பவற்றின் அறிக்கைகள் மழுப்பல் நிலையிலேயே வெளிவந்தது. அதில் யாருக்கும் திருப்தியில்லை. இந்தத் தாக்குதலானது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கியதொன்றாகும். இந்த விடயம் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் புலனாய்வு அறிக்கைகள் பெறப்பட வேண்டும். சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அரச புலனாய்வுத்துறை இவ்விடயத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் குறித்த உண்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்துகொண்டிருக்கும்போது போலியான கருத்துகளை வெளியிட்டு பிள்ளையான் போன்றவர்கள் மீண்டும் முஸ்லிம் சமூகத்தை நோகடிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இவர்களின் இத்தகைய போக்குகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆசாத் மௌலானாவின் கருத்துகளைப் பார்க்கும் போது கடந்த கால சம்பவங்களுடன் அவரது கருத்துகளும் ஒத்துப்போகின்றன. காத்தான்குடி வயோதிபரின் கொலை, பொலிஸாரின் கொலை, குண்டுவெடிப்பு போன்ற விடயங்கள் நடந்து, நீதிமன்றம் சஹ்ரானுக்கு பிடியாணை வழங்கியும் அவர் சுதந்திரமாக நடமாடக் காரணமாக இருந்தவர்கள் தொடர்பில் இப்போது உண்மைகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. மிகத்திறமையான புலனாய்வாளர்களைக் கொண்ட எமது நாட்டின் புலனாய்வுத்துறை சஹ்ரானை கைது செய்யாமைக்கான காரணம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் பாரிய சக்திகள் இருப்பதாக ஆரம்பம் முதலே கூறிவருகிறார். இந்தத் தாக்குதல்களில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இது விடயத்தில் ஜனாதிபதி எந்த பக்கச்சார்புமின்றி நடப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எந்தத் தகுதி, தராதரமுமின்றி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

# மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்






கிண்ணியா

மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம்(11) மாலை இடம்பெற்றது.

மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட பின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்ட ஏ.எல்.எம்.அதாவுல்லா மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் வரவேற்கப்பட்டார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், திணைக்களங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மூதூர் தள வைத்தியசாலையில் நிலவும் விசேட வைத்திய நிபுணர்களின் தட்டுப்பாடு குறித்து மூதூர் தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கயல்விழி இதன்போது சுட்டிக்காட்டினார்.இதற்காக உரிய தரப்பினரோடு பேசி தீர்வைப் பெற்றுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, மூதூர் அறபா நகர் பாலம் உடைந்து காணப்படுவதாக இம்ரான் மஹ்ரூப் எம்.பி. இதன்போது சுட்டிக்காட்டினார்.இதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது தோப்பூர் பிரதேசத்திலுள்ள அல்லைக்குள காணி அபகரிப்பு,தோப்பூர் -சூர்கண்டம் பகுதியில் அமைக்கப்படவுள்ள மதுபானசாலை விவகாரம்,குடிநீர்ப் பிரச்சினை, வேதத்தீவு பாலப் பிரச்சினை,காட்டு யானைகளின் அட்டகாசம்,தோப்பூரில் மாடறுக்கும் மண்டபம்,வடிகான்கள் சீரமைப்பு, தோப்பூர் பிரதேசத்துக்கான தனியான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**சனல் 4, வைச்ச குற்றச்சாட்ட விசாரிக்க சர்வதேச விசாரண தேவை யெண்டு எல்லாப்பேரும் சொல்லக்குள அந்த ஜனாதிபதி ரணில் ஐயா குழு போட்டு விசாரண நடத்தப்போறதாக வழமையான நரிப்புத்திய காட்டித்தாரு எலுவா...?**

**கள்ளனப்புடிச்சு பொலிசு வேல குடுக்கிற மாதிரி எலுவா இந்த குழு இருக்கப்போகுது..**

**பாம்புக்கும் நோகாம பாம்புக்கு அடிச்ச கம்புக்கும் நோகாம அடுத்த ஜனாதிபதியாக வாறத்துக்கு அம்மாச்சிட நரி விளையாட்டு இது எண்டது புரிஞ்சா சரி மக்களே....!**



**யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர் ஓ.கே.எவ். ஷரீபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.**

**படம்:** இஸ்மாயில்புரம் செய்தியாளர்

# ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

இஸ்மாயில்புரம் செய்தியாளர்

இலங்கை பத்திரிகைப் பேரவையின் 50 ஆவது நிறைவை முன்னிட்டும் ஆரோக்கியமான ஊடகவியல் மற்றும் பத்திரிகையாளர்களின் நலன்புரி வாழ்வியலை முன்னேற்றும் சபையின் நோக்கத்துக்கு அமைவாகவும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு 02 ஆவது தடவையாகவும் இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்குவதற்கு இலங்கை பத்திரிகை பேரவை தீர்மானித்துள்ளது.

ஊடகவியலாளர்களினதும் அவர்களது பிள்ளைகளினதும் நலன்புரி மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் ஊடக சேவையை முன்னெடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்களுக்கு தொழிற்றுறை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சந்தர்ப்பங்களை உருவாக்குவது இலங்கை பத்திரிகைப் பேரவையின் நோக்கமாகவுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த இலவச உதவியை பெற்றுக்கொள்ள விரும்பும் ஊடகவியலாளர்கள் தமது விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பத்திரிகை பேரவைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# வீட்டுத்தோட்டப் பயிர்கள் அறிமுகம்



கல்குடா நிருபர்

சக்ஸஷ் முன்பள்ளி மாணவர்களுக்கு விதைகள் மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு வகையான பயிர்விதைகள் ஆசிரியைகளினால் அறிமுகம் செய்யப்பட்டன.

நாற்று மேடை, நாற்று நடல் மற்றும் நாற்றுகள் எவ்வாறு முளைக்கும் என்பன பற்றியும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

# மாகாண மட்ட கைப்பந்து போட்டி

## மட்டக்களப்பு, கல்முனை அணிகளுக்கு முதலாம் இரண்டாம் இடங்கள்




பொலிவேரியன் செய்தியாளர்

கிழக்குமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான கைப்பந்தாட்டப் போட்டி கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் நடைபெற்றது. இதன்போது 17வயதுக்குட்பட்டவர்களுக்கான மேற்படி போட்டியில் முதலாம் இடத்தை மட்டக்களப்பு சென். மைக்கல் அணியும் 2ஆம் இடத்தை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை அணியும் பெற்றுக்கொண்டன.

வரலாற்றில் முதன்முறையாக (Handball)கைப்பந்து போட்டி கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றமை இதுவே முதற்றடவையாகும். இப்போட்டியில் 51 பாடசாலைகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

கைப்பந்து விளையாட்டை கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் அறிமுகப்படுத்தி, பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம்.றகீப், உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எம்.றஜீப், எச்.எம்.ஜெமீன், விளையாட்டு பயிற் றுவிப்பாளர் ஏ.எம்.ஜப்ரான் மற்றும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் ஆகியோருக்கு அதிபர் எம்.ஐ. ஜாபிர் உட்பட பிரதி அதிபர்கள், கல்வி சார் - சாரா ஊழியர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச தற்கொலை தடுப்பு தினம்: கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்வு

மாளிகைக்காடு செய்தியாளர்

சர்வதேச தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ. எல். எம். றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய கல்முனை பிராந்திய உள நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். ஜே. நௌபலினால் இவ் விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பி. அப்துல் வாஜித் அறிமுக உரை நிகழ்த்தினார். இதன்போது வைத்தியர் எம். ஜே. நௌபல் கருத்து தெரிவிக்கையில், தற்போது தற்கொலைகள் சமுதாய மட்டத்தில் அதிகரித்துள்ளன. இதற்கு பொருளியல், சமூகவியல் காரணிகள் துணை நிற்பதாக அறியமுடிகிறது. இவ்வாறானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உளநல மருத்துவ சிகிச்சைகளை வழங்கும்போது தற்கொலைகள் உள்ளிட்ட ஏனைய சமூகவியல் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் தெரிவிக்கையில், சமூக வட்டத்தில் ஆன்மீக கருத்துகளை அதிகம் பரப்புவதனூடாகவும் சமய நிறுவனங்களின் அனுசரணையைப் பெறுவதனூடாகவும் தற்கொலைகளைக் குறைக்க முடியும் என்று நம்புகின்றேன். மக்கள் தற்காலத்தில் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இந்நிலைமையை மாற்றியமைக்க சுகாதாரப் பணிப்பாளர் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு

# பதில் செயலாளராக மன்சூர் கடமையேற்பு



மீனோடைக்கட்டு செய்தியாளர்

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளராக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர் தனது கடமைகளை நேற்று முன்தினம் (11) பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க இதற்கான நியமனக் கடிதத்தை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துபண்டா, முதலமைச்சின் செயலாளர் என்.மதிவண்ணன், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம்.நஸீர், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# காலமானார்

மீரா நகர் செய்தியாளர்



தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் மர்ஹும் பழுலுல் ஹக்கின் புதல்வரும் தென்கிழக்கு பல்கலைக்கழக உத்தியோகத்தரும் அக்கரைப் பற்று அபூபக்கர் சித்தீக் அரபுக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளருமான அஷ்ஷெய்க் எவ்.எச். இஹ்சான் (ஹக்கானி) தனது 35ஆவது வயதில் கடந்த திங்கட்கிழமை (11) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் காலமானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் மட்டு. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார்.

இவரது ஜனாஸா பட்டியடிப்பிட்டி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# தாழங்குடாவில் கலைஞர்கள் ஒன்றுகூடல்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மண்முனைப்பற்று கலைஞர்களுக்கான ஒன்று கூடல் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் தாழங்குடா றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை மீனாட்சி மரத்தடியில் அண்மையில் இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஆலோசனையில் கதிரவன் கலைக் கழகம் மற்றும் கதிரவன் பட்டிமன்றப் பேரவையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது திறமைகளை வெளிக்காட்டிய கலைஞர்களின் அனுபவப் பகிர்வு மற்றும் கலை, கலாசார பண்பாட்டு நிகழ்வுகள் என பல்வேறு விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், கதிரவன் கலைக்கழகம் மற்றும் கதிரவன் பட்டிமன்றப் பேரவைத் தலைவர் த.இன்பராசா மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



**பாண்டிருப்பில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஐஸ் ஏற்றிவந்த சிறியரக லொறியொன்று குடைசாய்ந்து கிடப்பதைக் காணலாம்.** **படம்:** பாண்டிருப்பு நிருபர்

# மொரோக்கோ பேரதிர்வு: 3,000 பேர் உயிரிழப்பு

## இழப்புகளை சரிசெய்ய உதவிக்கரம் நீட்டுமாறு உலக நாடுகளிடம் வேண்டுகோள்



உலக செய்திகள்

மொராக்கோவில் ஏற்பட்ட 6.8 ரிச்டர் நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3ஆயிரத்தை நெறுங்கியுள்ளது. அங்கு கட்டட இடிபாடுகளில் சிக்கி 2ஆயிரத்து 862இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 2ஆயிரத்து 562 பேர் காயமடைந்துள்ளனர்.

மீட்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவரும் நிலையில் காயமடைந்தோரில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் மொரோக்கோ அரசு நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள இழப்புகளை சரி செய்ய உலக நாடுகளின் உதவியை கோரியுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொரோக்கோவில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 6.8 ரிச்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால், தலைநகர் ரபாத், காசா பிளாங்கா உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் சீட்டுக்கட்டுபோல சரிந்து விழுந்தன. நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால், நித்திரையிலிருந்தோர் சுதாகரித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இந்நிலையில் இடிபாடுகளில் சிக்கி 2ஆயிரத்து 862இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் 2ஆயிரத்து 562 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மொரோக்கோவை உலுக்கிய இந்த சம்பவத்தால் அங்கு மூன்று நாட்கள் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்திருந்தது.

மீட்புப் பணிகள் இன்று 5ஆவது நாளாகவும் தொடர்கிறது. கடந்த 2021ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரச்சினையால் மொரோக்கோவுடன் தூதரக உறவை துண்டித்த அல்ஜீரியா, மனிதாபிமான அடிப்படையில் தற்போது தனது வான்வெளியை பயன்படுத்த மொரோக்கோவுக்கு அனுமதியளித்துள்ளது. அமெரிக்கா, இந்தியா, சீனா, பிரான்ஸ், எகிப்து, இஸ்ரேல், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் மொரோக்கோவுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன.

# உக்ரைன் - ரஷ்ய போருக்கு இடையே புட்டின் - கிம் ஜோங் உன் சந்திப்பு



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்திக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கிடையான போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்துவரும் நிலையில், இவ்விரு நாடுகளின் தலைவர்கள் சந்தித்துக்கொள்வது சர்வதேச அரசியல் அரங்கில் பேசுபொருளாகியுள்ளது.

ஆயுதப்படை பாதுகாப்புடன் கூடிய சிறப்பு ரயிலில் வடகொரியாவின் வடகிழக்கு எல்லையை கடந்து அவர் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்த வடகொரிய தேசிய விழாவில் ரஷ்ய, சீன அதிகாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. சீனாதான் வட கொரியாவின் முக்கிய வர்த்தக கூட்டாளியாக உள்ளது. இந்நாட்டிலிருந்து மீன் வகைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ரஷ்யாவுக்கு சென்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு ஆயுதம் வழங்குவது தொடர்பாக புட்டின் கோரிக்கை விடுத்திருந்தார். இதுதொடர்பாக, விளாடிவோஸ்டக் நகரில் புட்டினுடன் கிம் ஜோங் உன் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கிம்மின் ரஷ்ய பயணம் குறித்து வட கொரிய ஊடகம் அதிகாரபூர்வமாக அறிவிக்காதநிலையில், ரஷ்யாவின் இன்டர்ஃபேக்ஸ் செய்தி நிறுவனம் கிம் ஜோங் ரஷ்யா வருவதாக செய்தி வெளியிட்டுள்ளது. அதேபோல், தென் கொரிய ஊடகங்களும் கிம் ரஷ்யா புறப்பட்டுச் சென்றுவிட்டதாக செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் பயணிக்கும் பச்சை நிற ரயில் குறித்த புகைப்படங்கள் வெளியாகி கவனம் பெற்றுள்ளன. ரஷ்யாவின் இன்டர்ஃபேக்ஸ் செய்தி நிறுவனம் கிம் ஜோங் உன்னின் ரஷ்ய வருகை உறுதிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் அவர் வெளிநாட்டுக்குச் செல்வது 04 ஆண்டுகளுக்குப் பின்னர் இதுவே முதன் முறையாகும். கிம் ஜோங் - புட்டின் சந்திப்புக்கு நிகராக பேசப்படுவது கிம் பயணிக்கும் கவச ரயில் குறித்துதான்.

வட கொரியாவிலிருந்து ரஷ்யா வரை சுமார் 1,180 கி.மீ. தொலைவை ரயிலில் கடக்கிறார் கிம். இந்த ரயில் பயணத்துக்கு பின்னால் சில சுவாரஷ்யமூட்டும் தகவல்கள் உள்ளன. மணிக்கு 59 கி.மீ. வேகத்தில் மட்டுமே செல்லும் இந்த ரயில் முழுக்க முழுக்க பச்சை நிறத்திலுள்ளது. 1,180 கிலோமீற்றர் தொலைவை 20 மணிநேரத்துக்கும் மேலாக கிம், இராணுவ அதிகாரிகள் படை சூழ இந்த குறிப்பிட்ட ரயிலில் பயணம் செய்ய பாரம்பரிய பின்னணி ஒன்றும் உள்ளது.

கிம் ஜோங் உன்னின் தந்தை கிம் ஜோங் இல் (Kim Jong Il) மற்றும் தாத்தா கிம் இல் சுங் (Kim Il Sung) ஆகிய இருவருக்கும் விமான பயணத்தின்மீது அச்சம் இருந்ததாக சொல்லப்படுகிறது. அவர்களின் ஜெட் ஒன்று சோதனை ஓட்டத்தில் வெடித்ததில் இருந்து இருவரும் விமானப் பயணங்களை மேற்கொண்டதில்லை என்பதும் பலமுறை வெளிவந்துள்ளது. கிம் இல் சுங் கடந்த 1986இல் சோவியத் யூனியனுக்கு விமானத்தில் சென்றதே, கடந்த மூன்று தசாப்தங்களில், வட கொரிய தலைவர் ஒருவர் அதிகாரபூர்வமாக மேற்கொண்ட விமானப் பயணம் என்பது அதற்கான சான்று. இதன்பின் வடகொரிய தலைமை பொறுப்பில் இருந்த எவரும் அதிகாரபூர்வ விமானப் பயணங்களை மேற்கொண்டதில்லை.

கிம் ஜோங் உன்னின் தந்தை கிம் ஜாங் இல், இதேபோல் 2001இல் புட்டினை சந்திக்க ரஷ்யா சென்றபோது 10 நாட்கள் ரயில் பயணம் செய்தார். கிம் ஜோங் உன்னை பொறுத்தவரை 1990களில் சுவிட்சர்லாந்தில் படித்தவர் என்பதாலும் அடிக்கடி விமான பயணங்களை மேற்கொண்டவர் என்பதாலும் அவருக்கு விமானத்தில் அச்சம் என்றே கூறப்படுகிறது. எனினும், 2011இல் வடகொரிய ஜனாதிபதியாக கிம் ஜோங் உன் பதவியேற்றதிலிருந்து பெரும்பாலும் தனது தொலைதூரப் பயணங்களுக்கு ரயிலையே தெரிவு செய்கிறார். கடைசியாக இரு முறை சீனாவுக்கு சென்றபோதும், இதற்கு முன் ரஷ்யாவுக்கு சென்றபோதும் ரயிலே கிம்மின் பிரதான தெரிவு.

கிம் ஜோங் உன் பயணிக்கும் இந்த பச்சை நிற ரயில் மொத்தமாக 90 பெட்டிகள் கொண்டது. அனைத்து பெட்டிகளுமே குண்டு துளைக்க முடியாதவை. வெடிகுண்டு அல்ல, ரொக்கெட் லோஞ்சரை வைத்தும் இந்த ரயிலை தாக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. இதனால் தான் இந்த ரயிலை கவச ரயில் என்று கொரிய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. ரயிலினுள் யார் யார் இருக்கிறார்கள் என்பது வெளியில் தெரியாத வகையில் ரயிலின் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன.




ரயிலுக்குள் பார்பிக்யூ தயாரிக்கும் உணவகம், ஆலோசனை அறை, படுக்கையறை, செட்டிலைட் தொலைபேசிகள், தொலைக்காட்சிகள் போன்ற அதிநவீன வசதிகளும் இருப்பதாக கூறப்படுகிறது. இவை தவிர போதுமான அளவிலான ஆயுதங்களுடன், ஏவுகணைகளை வழிமறித்து தாக்கும் வசதியும் இருப்பதாக ஒரு தகவல் சொல்லப்படுகிறது. இதனால் ரயிலின் எடையும் மிக மிக அதிகம்.

# இந்தியாவிடம் படுதோல்வியடைந்த பாகிஸ்தான்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியை 228 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தி அபார வெற்றியை பதிவு செய்தது. சுப்பர் 4 சுற்றில் இந்திய அணி தங்களுடைய முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொண்டது.

போட்டியின் முதல் நாள் ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிலையில் இந்திய அணி 147 ரன்களில் 02 விக்கெட்டுகளை இழந்த நிலையில் மழையால் ஆட்டம் அடுத்த நாளுக்கு மாற்றப்பட்டது. அடுத்த நாள் விடப்பட்ட இடத்திலிருந்து ஆட்டம் தொடங்கியது. இதில் விராட் கோஹ்லியும் கே.எல். ராகுலும் தங்களுடைய வாழ்நாளில் சிறந்த இன்னிங்ஸ் ஒன்றை விளையாடினார்கள்.

கே.எல். ராகுல் 106 பந்துகளில் 111 ரன்கள் விளாசினார். மறுமுனையில் இருந்த விராட் கோஹ்லி 94 பந்துகளில் 122 ரன்கள் குவித்தார். இதன்மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 47ஆவது சதம், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் அதிவேகமாக 13,000 ரன்கள் என பல்வேறு சாதனைகளை விராட் கோஹ்லி படைத்தார். இந்திய அணி 50 ஓவர் முடிவில் 356 ரன்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை எடுத்தது.



இதனை தொடர்ந்து 357 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி தங்களது இன்னிங்ஸை தொடங்கியது. ஆரம்பத்தில் இருந்து அடுத்தடுத்து விக்கெட்களை இழக்க பாகிஸ்தான் அணி 128 ரன்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. சிறப்பாக பந்து வீசிய குல்திப் யாதவ் 8 ஓவர்கள் வீசி 25 ரன்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

# இந்திய - பாக். ஆட்டத்தில் சாதனைகளும் வேதனைகளும்

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டன. அதேவேளையில் பாகிஸ்தான் பல்வேறு மோசமான சாதனைகளில் இடம்பிடித்தது.



1. இது இந்தியாவின் மிகப்பெரிய வெற்றிகளில் நான்காவது ஆகும். 2023இல் இலங்கைக்கு எதிராக 317 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 2007இல் பெர்முடாவுக்கு எதிராக 257 ரன்கள் வித்தியாசத்திலும் 2008இல் ஹொங்கொங் அணிக்கெதிராக 256 ரன்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றிருந்தது.

2. பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய தோல்வியை ஏற்படுத்திய 2ஆவது அணி இந்தியா ஆகும். 2009இல் இலங்கை 234 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது. 2002இல் அவுஸ்திரேலியா 224 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியிருந்தது. 1992இல் இங்கிலாந்து 198 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியிருந்தது.

3. ஆசிய கிண்ணத்தில் மிகப்பெரிய வித்தியாசத்தில் இது நான்காவது வெற்றியாகும். 2009இல் இந்தியா ஹொங்கொங் அணிக்கெதிராக 256 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 2023இல் நேபாளத்துக்கு எதிராக பாகிஸ்தான் 238 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 2000இல் பங்களாதேஷூக்கு எதிராக பாகிஸ்தான் 233 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

4. இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானின் 3ஆவது குறைந்த பட்சம் இதுவாகும். 1985இல் 87 ரன்னில் சுருண்டுள்ளது. 1997இல் 116 ரன்னில் சுருண்டுள்ளது. தற்போது 128 ரன்னில் சுருண்டுள்ளது. 1984இல் சார்ஜாவில் 134 ரன்னில் சுருண்டுள்ளது.

5. பாகிஸ்தானுக்கு எதிரான மிகப்பெரிய வெற்றி இதுவாகும். இதற்கு முன் 2008இல் 140 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றிருந்தது. 2017இல் 124 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

6. பாகிஸ்தானுக்கு எதிராக சிறந்த சுழற்பந்து வீச்சு. 1988இல் அர்சத் ஆயுப் 21 ரன்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் சாய்த்துள்ளார். 2005இல் சச்சின் டெண்டுல்கர் 50 ரன்கள் கொடுத்து 5 விக்கெட் சாய்த்துள்ளார். தற்போது குல்தீப் யாதவ் 25 ரன்கள் கொடுத்து 5 விக்கெட் எடுத்துள்ளார். 1996இல் அனில் கும்ப்ளே 12 ரன்கள் கொடுத்து 4 விக்கெட் எடுத்துள்ளார்.

7. பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவின் அதிகபட்ச பார்ட்னர்ஷிப் தற்போது விராட் கோஹ்லி - ராகுல் 233 ரன்கள் எடுத்துள்ளனர். அதன்பின் 1996இல் சித்து - டெண்டுல்கர் 231 ரன்கள் எடுத்துள்ளனர். 2018இல் தவான் - ரோஹித் சர்மா ஜோடி 210 ரன்கள் எடுத்துள்ளது. 2005இல் ராகுல் டிராவிட் - சேவாக் ஜோடி 201 ரன்கள் எடுத்துள்ளது.

8. ஆசிய கிண்ணத்தில் இதுதான் அதிகபட்ச பார்ட்னர்ஷிப் (விராட் கோஹ்லி - கே.எல். ராகுல் இடையில் 233 ரன்கள்) ஆகும்.

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்துக்கு தெரிவு

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



(பெரியநீலாவணை செய்தியாளர்)

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணி மாகாண மட்ட போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலை மட்ட 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட போட்டிகள் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் மற்றும் காரைதீவு விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்று வந்தது. 28 பாடசாலை அணிகள் பங்குபற்றிய இப் போட்டிகளில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி அணி, மட்டக்களப்பு பட்டிருப்பு வலயம் மண்டூர் மகா வித்தியாலயத்துடனான காலிறுதிப் போட்டியில் 2:0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. திருகோணமலை கிண்ணியா மத்திய கல்லூரியுடனான அரையிறுதி போட்டியில் தண்டனை உதையில் தோல்வியை தழுவிக் கொண்டது.

இந்நிலையில், மூன்றாம் இடத்தினை தெரிவு செய்வதற்கான போட்டி கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் இடம்பெற்றது. கிண்ணியா அல்- அஷ்ரக் தேசிய பாடசாலை, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகிய இரு பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி 1:1 என்ற சமநிலையோடு முடிவடைந்தது. இதனை தொடர்ந்து இடம்பெற்ற தண்டனை உதையில், 5:3 என்று கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஷம்ஸ் மத்திய கல்லூரி அணி மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# ஒரே ஆட்டத்தில் பல சாதனைகளை படைத்த கோஹ்லி

பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் 94 பந்தில் 122 ரன்கள் விளாசிய விராட் கோஹ்லி ஆட்ட நாயகன் விருதை வென்றார். இந்தப் போட்டியில் சதம் அடித்து 122 ரன்கள் குவித்ததன்மூலம் விராட் கோஹ்லி பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார். அவர் 98 ரன்களை தொட்டபோது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 13 ஆயிரம் ரன்களை பதிவு செய்தார்.

இதன்மூலம் குறைந்த இன்னிங்ஸில் விரைவாக 13 ஆயிரம் ரன்களை கடந்து சாதனைப் படைத்துள்ளார். இதற்கு முன் சச்சின் டெண்டுல்கர் 321 இன்னிங்ஸில் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார். தற்போது விராட் கோஹ்லி 267 இன்னிங்ஸில் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். ரிக்கி பாண்டிங் 341 இன்னிங்ஸிலும் குமார் சங்கக்காரா 363 இன்னிங்ஸிலும் சனத் ஜெயசூர்யா 416 இன்னிங்ஸிலும் 13 ஆயிரம் ரன்களை கடந்துள்ளனர்.

மேலும், 8 ஆயிரம், 9 ஆயிரம், 10 ஆயிரம், 11 ஆயிரம், 12 ஆயிரம் ரன்களை குறைந்த இன்னிங்ஸில் எட்டியவர் என்ற சாதனையும் இவரது கைவசமே உள்ளது. மேலும், 47 சதங்கள் விளாசி சச்சினுக்கு அடுத்த இடத்தில் உள்ளார். சச்சின் டெண்டுல்கர் 49 சதங்களுடன் முதல் இடத்திலுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7